www.facebook.com / newsplustamil www.newsplus.lk twitter.com/newsplus.lk

# NEWS PLUS

உன்னதமான பயணத்தின் அடையாளம்

08 AUGUST 2022 - MONDAY | Pages - 10 | E Paper - # 001 / Y 01 / 2022

Web: WWW.NEWSPLUS.LK E-mail: editor@newsplus.lk



**பொருளாதார நெருக்கடியில் இருந்து இலங்கை மீண்டெழுவது எப்படி?**

06

Cake Talk
Bakery & Confectionery
Telecom Juntion, kattankudy - 01.
Tel : 065 2248 444
55, Old Road, kattankudy - 03.
Tel : 065 2248 044
Hotline : 077 601 55 84



## டலஸின் 4 நிபந்தனைகள்

சர்வ கட்சி அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கு ஜனாதிபதி வேட்பாளரும் முன்னாள் அமைச்சருமான டலஸ் அழகப் பெரும நான்கு நிபந்தனைகளை விதித்துள்ளார்.

நாட்டில் ஸ்திரமான பொருளாதார நிலை உருவாக்கப்படும் வரை எவருக்கும் அமைச்சு, பிரதி அமைச்சு, இராஜாங்க அமைச்சுப்

02 »»»

# கட்சிகளிடையே இழுபறி: சர்வ கட்சிக்கு நெருக்கடி



### கடும் பிரயத்தனத்தில் ஜனாதிபதி

நாடு எதிர்நோக்கியுள்ள நெருக்கடி நிலையைக் கையாள்வதற்கு சர்வ கட்சி அரசாங்கம் ஒன்றை அமைப்பது தொடர்பில் அரசியல் கட்சிகளிடையே காணப்படும் இழுபறிநிலை காரணமாக உடனடியாக சர்வ கட்சி அரசு அமைவது சாத்தியமில்லை எனத் தெரிய வருகிறது.

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஜே.வி.பி, தேசிய சுதந்திர முன்னணி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், மக்கள் காங்கிரஸ், தமிழர் கூட்டமைப்பு என்பன அமைச்சுப் பதவிகளை

02 »»»

## 9 எதிர்கொள்வோம் அரசு அதிரடி

இம்மாதம் ஒன்பதாம் திகதி அரசுக்கு எதிராக நடாத்தப்படவிருப்பதாகக் கூறும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தைக் கட்டுப்படுத்துவதற்கு பாதுகாப்புத் தரப்பினருடன் பேச்சுவார்த்தை நடாத்தி நடவடிக்கைகள் எடுத்திருப்பதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார்.

02 »»»

## இம்மாத இறுதியில் உயர்தர முடிவுகள்

2021 க.பொ.த. உயர்தர பரீட்சை முடிவுகள் இம்மாத இறுதியில் வெளியிடப்படும் என

02 »»»

## ஜோசப் ஸ்டாலினுக்கு விரைவில் விடுதலை?

**றிஹ்மி ஹக்கீம்**

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின் விரைவில் விடுவிக்கப்படலாம் என்று நம்பகமான வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க ஜோசப் ஸ்டாலினை தொலைபேசியில் தொடர்பு கொண்டு உரையாடியதனை தொடர்ந்து இந்நிலைமை உருவாகியுள்ளது.

இதன்போது, ஸ்டாலினை

02 »»»

### மாவனெல்லை புத்தர் சிலை விவகாரம்:

## 3 1/2 வருடங்களின் பின்னர் முஸ்லிம் இளைஞர்கள் விடுதலை

2008 ஆம் ஆண்டு மாவனல்லைப் பிரதேசத்தில் புத்தர் சிலைகளை சேதப்படுத்திய சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட 16 முஸ்லிம் இளைஞர்கள் கேகாலை மேல் நீதிமன்றத்தினால் விடுவிக்கப்பட்டனர்.

02 »»»

## தேர்தல் மறுசீரமைப்பு: கட்சிகளுடன் திங்கள் பேச்சு

**றிஹ்மி ஹக்கீம்**

தேர்தல் சட்டதிட்ட மறுசீரமைப்பு தொடர்பில் பாராளுமன்ற விசேட தெரிவுக் குழுவினால் முன்வைக்கப்பட்டுள்ள தேர்தல் முறைமை திருத்தம் தொடர்பில் கலந்துரையாடுவதற்காக பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுக்கு தேர்தல்கள் ஆணைக்குழு அழைப்பு விடுத்துள்ளது.

இந்த கலந்துரையாடல் இன்று (08) முற்பகல் 10 மணிக்கு தேர்தல்கள் ஆணைக்குழுவில் நடைபெறவுள்ளது.

பாராளுமன்ற விசேட தெரிவுக்குழுவினால்

02 »»»

### அனாமதேய கடித விவகாரம்:

## மௌலவி சல்சபீல் விடுதலை

பகினிகஹவெல பள்ளிவாசலுக்கு அடிப்படைவாத அமைப்பு ஒன்று அனுப்பி வைத்திருந்த கடிதத்தைப் பள்ளிவாசல் கடிதக் கோவையில் வைத்திருந்தது குற்றம் எனக் கூறி கைது செய்யப்பட்டிருந்த பள்ளிவாசல் இமாமும் பிரபல சமூக சேவையாளருமான மௌலவி சல்சபில் நிரபராதியாக விடுவிக்கப்பட்டார்.

மொனராகலை பொலிஸார் மௌலவி சல்சபீலுக்கு எதிராகத் தாக்கல் செய்திருந்த வழக்கு 3 வருட கால விசாரணையின் பின் கடந்த வாரம் தீர்ப்பளிக்கப்பட்டது.

மொனராகலை மாவட்ட நீதவான்

02 »»»

## எரிக்கப்பட்ட ஜனாஸாக்களுக்கு நஷ்டஈடு வழங்க வேண்டும்

கடந்த கொரோனா தொற்றுக்காலத்தில் கொரோனாத் தொற்றினால் உயிரிழந்து எரிக்கப்பட்ட முஸ்லிம்களுக்கு நஷ்ட ஈடு வழங்க வேண்டுமென மேல் மாகாணத்தின் முன்னாள் ஆளுநர் அசாத் சாலி கோரிக்கை விடுத்துள்ளார்.

தேசிய ஐக்கிய முன்னணி சார்பில் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் இருந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

புதிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடமே அவர் இந்த வேண்டுகோளை விடுத்தார்.

**அசாத் சாலி ஜனாதிபதியிடம் வேண்டுகோள்!**





## 2023 ஏப்ரலின் பின் அடுத்த கல்வியாண்டு

இம்மாதம் ஒன்பதாம் திகதி அரசுக்கு எதிராக நடாத்தப்படவிருப்பதாகக் கூறும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தைக் கட்டுப்படுத்துவதற்கு பாதுகாப்புத்

02 »»»

Collaborate with...
SIYANE NEWS
www.siyanenews.com | facebook.com/Siyanemediacircle | twitter.com/SiyaneNews | Siyane Media Circle
SIYANE MEDIA CIRCLE (PVT) LTD
No. 41, Kahatowita, Veyangoda.
SIYANE Media Circle
SIYANE MEDIA CIRCLE
KAHATOWITA
GA 00213489
மாற்றத்தை நோக்கிய பயணம்

## கட்சிகளிடையே...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

ஏற்காது சர்வ கட்சி அரசுக்கு ஆதரவு வழங்குவதற்கு தயார் எனத் தெரிவித்துள்ளன.

இந்தப் பின்னணியில் பொதுஜன ஐக்கிய முன்னணி, தேசிய காங்கிரஸ், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் உட்பட்ட சில கட்சிகள் சர்வ கட்சி அரசாங்கம் அமைப்பதற்கு நேரடியாக ஆதரவு தெரிவித்துள்ளன.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பாராளுமன்றத்தில் அரசியல் கொள்கை பிரகடன உரையை நிகழ்த்திய பின் பிரதான கட்சிகளின் பிரதிநிதிகளைச் சந்தித்து சர்வ கட்சி அரசாங்கம் ஒன்றை அமைப்பது பற்றி பேச்சுவார்த்தையை ஆரம்பித்தார். இது தொடர்பாக கட்சிகள் முன் வைத்துள்ள பிரேரணைகளை ஜனாதிபதி அலுவலகம் இவ்வாரத்துல் அரசியல் கட்சிகளுக்கு அனுப்பவுள்ளது.

சர்வ கட்சி அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கு ஆதரவு வழங்குவதற்கு மறுத்துள்ள ஜே.வி.பி. செவ்வாய்க்கிழமை ஜனாதிபதியைச் சந்திப்பதற்கு நேரம் கோரியுள்ளது.

சர்வ கட்சி அரசு தொடர்பாக ஜனாதிபதி அடுத்தடுத்த வாரங்களில் இறுதி முடிவு எடுத்தபின் அமைச்சரவை மாற்றம் இடம்பெறும் என அரசியல் வட்டாரங்களில் தெரிவிக்கப்பட்டது.

## தேர்தல்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

முன்வைக்கப்பட்டுள்ள யோசனைகளில் சகல தரப்பினரும் இணங்கியுள்ள முன்மொழிவுகள் தொடர்பில் இச்சந்திப்பின் போது கலந்துரையாடப்படவுள்ளதுடன், இணக்கப்பாடு வெளியிடப்படாத முன்மொழிவுகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்படவுள்ளது.

இதற்கமைய எட்டப்படும் இறுதி இணக்கப்பாட்டை சட்டமாக்குவதற்கு அவசியமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இதேவேளை, நாளைய கலந்துரையாடலை தொடர்ந்து பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தாத அரசியல் கட்சிகளும் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அழைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## 9 எதிர்கொள்வோம்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெற்ற அரசு பாராளுமன்ற குழு கூட்டத்தில் அரசதரப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் அமைச்சரிடம் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்தே அமைச்சர் அலஸ் இதனைத் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் பீல் மார்ஷல் சரத் பொன்சேகா எச்சரிக்கை விடுத்த ஒன்பதாம் திகதியன்று கொழும்பில் சேரும் அரசியல்வாதிகளை விரட்டியடிப்பதாக அச்சுறுத்தல் விடுத்திருப்பதாக எம்.பிக்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

எதிர்ப்புத் தெரிவிப்போரைத் தாக்கவா அல்லது ஒழித்திருக்கவா என்பது குறித்து எம்.பிக்கள் கேள்வி எழுப்பி தெளிவான பதிலை அளிக்குமாறு கேட்டுள்ளனர்.

ஒன்பதாம் திகதி கொழும்புக்கு பெருந்தொகையான மக்கள் வரும் நிலை இல்லை. உளவுப் பிரிவு உறுதி செய்திருப்பதாகவும் அமைச்சர் கூறினார்.

## 2023...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

தரப்பினருடன் பேச்சுவார்த்தை நடாத்தி நடவடிக்கைகள் எடுத்திருப்பதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெற்ற அரசு பாராளுமன்ற குழு கூட்டத்தில் அரசதரப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் அமைச்சரிடம் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்தே அமைச்சர் அலஸ் இதனைத் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் பீல் மார்ஷல் சரத் பொன்சேகா எச்சரிக்கை விடுத்த ஒன்பதாம் திகதியன்று கொழும்பில் சேரும் அரசியல்வாதிகளை விரட்டியடிப்பதாக அச்சுறுத்தல் விடுத்திருப்பதாக எம்.பிக்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

எதிர்ப்புத் தெரிவிப்போரைத் தாக்கவா அல்லது ஒழித்திருக்கவா என்பது குறித்து எம்.பிக்கள் கேள்வி எழுப்பி தெளிவான பதிலை அளிக்குமாறு கேட்டுள்ளனர்.

ஒன்பதாம் திகதி கொழும்புக்கு பெருந்தொகையான மக்கள் வரும் நிலை இல்லை. உளவுப் பிரிவு உறுதி செய்திருப்பதாகவும் அமைச்சர் கூறினார்.

# அமைச்சுப் பதவிகளை பகிர்ந்துகொள்வதை விட பொதுவான தேசிய வேலைத்திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்துங்கள்

### ஜனாதிபதியிடம் எடுத்துரைத்ததாக ரிஷாட் எம்.பி தெரிவிப்பு!

பதவிகளுக்கென கட்சிகளை ஒன்று சேர்க்காமல், நாட்டுக்காக அனைத்துக் கட்சிகளையும் ஒன்றிணைக்கும் பொதுவான வேலைத்திட்டம் ஒன்றை முன்வைக்குமாறும், அந்த வேலைத்திட்டத்திற்கு எமது ஆதரவு கிடைக்கும் எனவும் ஜனாதிபதியிடம் தெரிவித்ததாக அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் குறிப்பிட்டார்.

சர்வகட்சி தேசிய வேலைத்திட்டம் தொடர்பில் ஜனாதிபதியுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர்,



ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

தொடர்ந்து பேசிய அவர்,

"நாடு எதிர்கொண்டுள்ள மோசமான நிலையை மாற்றி அமைப்பதற்காகவும், மக்களுக்குத் தேவையான அத்தியாவசிய பொருட்கள் மற்றும் இன்னோரன்ன தேவைகளை எளிதில் நிறைவேற்றும் வகையிலும், கியூவில் நின்று பொருட்களை பெரும் கலாச்சாரத்தை முற்றாக ஒழிக்கும் வகையிலும் ஜனாதிபதி எடுக்கும் நல்ல நடவடிக்கைகளுக்கு நாம் பூரண ஒத்துழைப்பு நல்குவோம் எனவும் இச்சந்திப்பில் உறுதியளித்தோம்.

மேலும், காலி முகத்திடலில் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் குறிவைத்து கைது செய்யப்பட்டமை மற்றும் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஸ்டாலினின் கைது தொடர்பிலும் எமது ஆட்சேபனையையும் கவலையையும் தெரிவித்ததோடு, இவ்வாறான பயமுறுத்தல் நடவடிக்கைகள் நாட்டின் பொருளாதாரத்தை இன்னும் அதலபாதாளத்திற்கு கொண்டு செல்லும் என்பதையும் சுட்டிக்காட்டினோம்.

19 ஆவது திருத்தத்தை உடனடியாகக் கொண்டு வந்து, அதனை விரைவாக நடைமுறைப்படுத்துமாறும், பாராளுமன்றத்தில் அமைச்சுக்களை கண்காணிக்கும் குழுக்களை அமைக்குமாறும் வேண்டுகோள் விடுத்தோம். அத்துடன், அவசரகாலச் சட்டத்தை பயன்படுத்தி, வகைதொகையின்றி ஆட்களை கைது செய்யும் நடவடிக்கையை உடன் நிறுத்துவதுடன், அவசரகாலச் சட்டத்தில் தொடர்ந்து நீடிக்கக் கூடாது எனவும் வலியுறுத்தினோம்.

இனவாதத்தையும் மதவாதத்தையும் கக்கி ஆட்சிக்கு வந்தவர்கள், கடந்த காலங்களில் நாட்டினதும், மக்களினதும் நலனைக் கருத்திற்கொள்ளாது செயற்பட்டமையை உணர்த்தியதுடன், இனவாதத்தை விதைப்பதன் ஊடாக தங்களது அரசியல் இருப்பு நீடிக்கும் என்ற தப்பெண்ணம் கொண்டு செயற்பட்டதனால்தான், இந்த நாடு இவ்வாறான கீழ்நிலைக்கு தள்ளப்பட்டது என்பதையும் சுட்டிக்காட்டினோம்.

ஆகையால், எதிர்காலத்தில் இனவாத சக்திகளின் கரங்களை ஓங்கவிடாமல் பாதுகாக்க வேண்டும் எனவும், அந்த விடயத்தில் கூடிய கவனஞ்செலுத்துமாறும் ஜனாதிபதியிடம் வலியுறுத்தினோம்" என்று அவர் தெரிவித்தார்.

## டலஸின்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

பதவிகள் வழங்கப்பட கூடாது என்ற கோரிக்கையை முன்வைத்துள்ளதோடு, தனது குழு எவ்வித அமைச்சுகளையும் பொறுப்பேற்கப் போவதில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

டலஸ் தலைமையிலான அணியினர் அண்மையில் ஜனாதிபதியைச் சந்தித்தபோது நான்கு கோரிக்கைகளை முன் வைத்துள்ளனர்.

பாராளுமன்ற நடவடிக்கைகளை குழுக்கள் மூலம் செயற்படுத்துவதற்கு தமது பூரண ஆதரவை வழங்குவதாக டலஸ் அணியினர் தெரிவித்துள்ளனர்.

## ஜோசப்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

கைது செய்தது சட்டப்பூர்வமானது என்றும், சட்டத்தை மீறியவர்களையும் மற்றவர்களையும் தேர்ந்தெடுப்பதில் சிக்கல் இருப்பதாகவும் ஜனாதிபதியால் ஸ்டாலினிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

போராட்டத்தில் நல்ல பக்கம் மற்றும் கெட்ட பக்கம் உள்ளது. அதில் பக்கத்தில் மட்டுமே கவனம் செலுத்த வேண்டும் என்று ஸ்டாலினிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், முறைமை மாற்றத்தை வலியுறுத்தும் போராட்டக்கள உறுப்பினர்களை தாம் பாராட்டுவதாகவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

## இம்மாத...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் எஸ். டபிள்யூ.டி. தர்மசேன தெரிவித்தார். 2021 க.பொ.த. உயர்தரப் பரீட்சை இவ்வாண்டு பெப்ரவரி மாதத்திலே நடைபெற்றது.

## மௌலவி...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

ஏ.எல்.சஜினி சமர விக்ரம மௌலவி எம்.எஸ். சல்சபீல் நிரபராதி என உத்தரவு பிறப்பித்து விடுதலை செய்தார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின் முஸ்லிம் பள்ளிவாசல்கள் மற்றும் வீடுகள் பரிசோதிக்கப்பட்ட போதே இக்கடிதம் கண்டுபிடிக்கப்பட்டது. இக்கடிதம் பற்றி பாதுகாப்புத் தரப்பினருக்கு அறிவிக்கவில்லை என்றே குற்றம் சாட்டப்பட்டிருந்தார்.

2019 மே 2 ஆம் திகதி பள்ளிவாசலைப் பரிசோதனைக்கு உட்படுத்திய போதே இக்கடிதம் கண்டுபிடிக்கப்பட்டது.

சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எல். தாஹா நஜ்முதீன் மற்றும் பியும் ஜயசேகர ஆகியோர் பள்ளிவாசல் சார்பில் ஆஜராகியிருந்தனர்.

## மாவனெல்லை

(முன்பக்கத் தொடர்ச்சி...)

கேகாலை நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட வழக்கில் மாவனல்லைப் பிரதேசத்தில் கைதான 45 பேரில் 16 பேர் கேகாலை மேல் நீதிமன்றத்தில் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர்.

இவர்களில் மூவர் விடுவிக்கப்பட்டதோடு, 11பேர் 7 வருட ஒத்திவைக்கப்பட்ட மூன்று மாத சிறைத் தண்டனை விதிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டனர்.

16 பேரில் 11 பேர் குற்றத்தை ஒப்புக்கொண்டதனை அடுத்து 7 வருடங்கள் ஒத்திவைக்கப்பட்ட மூன்று மாத சாதாரண சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. இருவர் குற்றத்தை ஏற்றுக் கொள்ளாததனால் அவர்கள் குறித்து அடுத்த நடவடிக்கை எடுப்பதற்கு சட்டமா அதிபரின் கருத்தினைக் கோருவதற்கு நீதிமன்றம் தீர்மானித்தது.

பல மாதங்களாக நீடித்த விசாரணையின் தீர்ப்பு கடந்த 2 ஆம் திகதி அறிவிக்கப்பட்டது. ஒத்திவைக்கப்பட்ட சிறைத் தண்டனைக்கு மேலாக 10,000 ரூபாய் அபராதமும் இவர்களுக்கு விதிக்கப்பட்டது.

மேல் நீதிமன்ற நீதியரசர்களான ஜகத் கஹந்தகம (தலைவர்) ஜயகி டி அல்விஸ், இந்திரா காலிங்கவங்க ஆகியோர் முன்னிலையில் டிரயல் அட் பார் நீதிமன்றத்தில் இந்த வழக்கு விசாரிக்கப்பட்டது.

சந்தேகநபர்கள் மூன்றரை வருடங்களுக்கு மேலாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர். இதற்கு முன் எவ்வித குற்றமும் செய்திருக்காத குற்றவாளிகள் விரைவான விடுதலைக்காக குற்றத்தை ஏற்றுக் கொண்டனர்.

இவர்களுக்கு பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழே ஆரம்பத்தில் வழக்குதாக்கல் செய்யப்பட்டிருந்தது. இவர்கள் சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.எம். சுஹைர் சட்டமா அதிபருக்கு விடுத்த வேண்டுகோளையடுத்து, குற்றவியல் சட்டத்தின் 209, 290 ஷரத்துகளின் சந்தேக நபர்கள் குற்றத்தை ஏற்றுக் கொண்டதனையடுத்தே குறைந்த தண்டனை விதிக்கப்பட்டது.

2018 ஆம் ஆண்டுக்கு முன் சிறுபான்மையினர் குறிப்பாக, முஸ்லிம்களை இலக்காக மேற்கொண்ட தாக்குதல்களை அடுத்து குற்றவாளிகள் நாட்டில் தமக்கு எதிர்காலத்தில் வாழ முடியாத சூழ்நிலை ஏற்படுமா என்ற அச்சத்திலும் வீதியிலும் வாழ்ந்துள்ளதாக விசாரணைகளில் தெரிய வந்திருப்பதாக ஜனாதிபதி சட்டத்தரணி சுஹைர் நீதிமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்திருந்தார்.

சிறுபான்மையினர் மத்தியில் உருவாகியுள்ள பீதியையும் அச்சத்தையும் போக்குவதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க தவறினர் என்றும் சட்டத்தரணி சுட்டிக்காட்டியதோடு, இவர்கள் மாவனல்லைப் பிரதேசத்தில் பெரும்பான்மை மக்களுடன் சமாதானத்துடனும் சௌபாக்கியத்துடன் வாழ்ந்து வந்ததாகவும் தெரிவித்தார்.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்ததாக இவர்களுக்கு பிணை வழங்கப்பட்டிருக்கவில்லை.

ஜனாதிபதி சட்டத்தரணி எம்.எம். சுஹைர் மற்றும் சட்டத்தரணிகளான ருஷ்டி ஹபீப், சம்பத் ஹேவா பத்திரன ஆகியோர் இவர்கள் சார்பில் ஆஜராகினர்.



# சமூகப் பிரச்சினைகளுக்கு தீர்வு பெறக்கூடிய வாய்ப்பை தட்டிக்கழிக்காதீர்

## முஸ்லிம் தலைமைகளிடம் கிழக்கிலங்கை முஸ்லிம் முன்னணி வேண்டுகோள்!

(அஸ்லம் எஸ்.மௌலானா)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் சமூகம் சார்ந்த கோரிக்கைகளுக்கான உத்தரவாதங்களை பெற்றுக் கொண்டு, அமையப்போகும் சர்வகட்சி அரசாங்கத்தில் முஸ்லிம் கட்சிகளும் இணைந்து கொள்ள வேண்டும். சமூகப் பிரச்சினைகளுக்கு தீர்வு பெறக்கூடிய நல்லதொரு வாய்ப்பை தட்டிக்கழித்து, தவற விட வேண்டாம் என கிழக்கிலங்கை முஸ்லிம் முன்னணி வேண்டுகோள் விடுத்துள்ளது.

இவ்விடயத்தை வலியுறுத்தி ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் மற்றும் தேசிய காங்கிரஸ் தலைமைகளுக்கு அவசர கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாக முன்னணியின் செயலாளர் செயிட் ஆஷிப் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்

நாடு எதிர்நோக்கியுள்ள பாரிய பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பதை இலக்காகக் கொண்டு நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கின்ற அனைத்துக் கட்சிகளையும் உள்ளடக்கியதாக சர்வகட்சி தேசிய அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கான திட்டத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்வைத்திருப்பதுடன் அதற்கான அழைப்பை அனைத்து கட்சிகளுக்கும் விடுத்திருக்கிறார்.

இவ்விடயமாக அரசியல் கட்சிகளுடன் கூட்டாகவும் தனித்தனியாகவும் ஜனாதிபதி பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்து வருகின்றார். சர்வகட்சி அரசாங்கம் அமைப்பதற்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்கப்படும் என பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி உறுதியளித்திருக்கிறது. பாராளுமன்றத்தில் ஜனாதிபதி தெரிவுக்காக போட்டியிட்ட டலஸ் அணியும் இதற்கு உடன்பட்டிருக்கிறது. ரணிலை அங்கீகரிக்காத மைத்திரி, விமல் வீரவன்ச, உதய கம்பன்பில போன்றோரும் ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டிருக்கின்றனர்.

தமிழ் மக்களை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற தமிழ் தேசியக் கூட்டமைப்பு, தமிழ் முற்போக்கு கூட்டணி, விக்னேஸ்வரன் அணி போன்றவை தமது சமூகம் சார்ந்த பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து, அவற்றுக்கான உத்தரவாதங்களைப் பெற்றுக் கொண்டு, சர்வகட்சி அரசாங்கத்தில் இணைந்து செயற்படுவதற்கு தயாராகி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

முஸ்லிம் கட்சிகளைப் பொறுத்தவரை தேசிய காங்கிரஸ் தலைவர் ஏ.எல்.எம். அதாஉல்லா, ஜனாதிபதி ரணிலை சந்தித்து, சர்வகட்சி அரசாங்கத்தில் இணைவதற்கான ஆர்வத்தை வெளிப்படுத்தியுள்ளார். ஆனால் அமைச்சுப் பதவி தவிர்ந்த, சமூகம் சார்ந்த விடயங்கள் தொடர்பில் ஜனாதிபதியுடன் அவர் ஏதாவது பேசினாரா என்பது பற்றி அறியக்கிடைக்கவில்லை.

அதேவேளை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் என்பன தாம் முஸ்லிம் சமூகத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற கட்சிகள் என்ற ரீதியில் இதுவரை ஜனாதிபதியை சந்தித்து எதுவும் பேசவில்லை. இவ்விரு கட்சிகளும் ஐக்கிய மக்கள் சக்தியில் அங்கம் வகிக்கின்ற பங்காளிக்கட்சிகள் என்பதால் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச எடுக்கும் தீர்மானத்துடன் இணங்கிப்போதல் என்ற நிலைப்பாட்டுடனேயே தொடர்ந்தும் இருப்பதாக அறிய முடிகிறது.

எவ்வாறாயினும் சர்வகட்சி அரசாங்கம் அமைப்பதற்கு சஜித் பிரேமதாச உடன்பட்டிருக்கின்ற நிலையில் கூட சமூகம் சார்ந்த விடயங்கள் குறித்து ஜனாதிபதியுடன் பிரத்தியேகமாகப் பேசுவதற்கு இவ்விரு முஸ்லிம் கட்சிகளும் ஆர்வம் காட்டாமல் ஐக்கிய மக்கள் சக்தியின் பின்னால் ஒளிந்து கொண்டிருப்பதானது முஸ்லிம் சமூகத்தினரிடையே பெரும் கவலையையும் சந்தேகத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

இது விடயத்தில் முஸ்லிம் கட்சிகள் சமூக மட்டத்தில் எவ்வித கலந்துரையாடல்களையும் மேற்கொள்ளவில்லை. குறைந்தபட்சம் ஷூரா சபை, உலமா சபை, முஸ்லிம் கவுன்சில் உள்ளிட்ட தேசிய ரீதியிலான சிவில் அமைப்புகளின் ஆலோசனைகளையாவது பெற்று செயற்படலாம். ஆனால் எந்தவொரு தூரநோக்கு சிந்தனையும் இல்லாமல் தமது எதிர்கால பிரதிநிதித்துவ அரசியலை மாத்திரம் மையமாகக் கொண்டே முஸ்லிம் கட்சிகளின் தலைமைகளும் இருபதாவது திருத்தத்தை ஆதரித்து விட்டு உதிரிகளாக இயங்குகின்ற அக்கட்சிகளின் எம்.பி.க்களும் செயற்பட்டு வருகின்றனர்.

பல்வேறு கோரிக்கைகளுடன் டலஸ் அழகப்பெருமவை ஆதரித்த தமிழ் தேசியக் கூட்டமைப்பானது அதே கோரிக்கைகளை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் முன்வைத்து, உத்தரவாதங்களைப் பெற்றுக் கொண்டு சர்வகட்சி அரசாங்கம் அமைப்பதற்கான ஆதரவை வெளிப்படுத்தியுள்ளது. ஆனால் இப்படியான நல்லதொரு வாய்ப்பை முஸ்லிம் கட்சிகள் தவற விடப் போகின்றனவா என்று சமூகம் அங்கலாய்க்கிறது. தற்போது 24 மணி நேரமும் அகலத் திறந்திருக்கின்ற ஜனாதிபதி மாளிகையின் கதவுகள் மூடப்பட்டால், பின்னொரு சந்தர்ப்பத்தில் எவ்வளவு தட்டினாலும் திறக்கப்படாமல், ஜனாதிபதியை சந்திக்கக்கூடிய வாய்ப்புக்கூட கிடைக்காமல் போகலாம்.

ஆகையினால் முஸ்லிம் கட்சிகளின் தலைமைகள் இனியும் தாமதியாமல் கிடைத்திருக்கின்ற நல்ல வாய்ப்பை பயன்படுத்தி, ஜனாதிபதியினால் நிறைவேற்றுவதற்கு சாத்தியமான முக்கிய கோரிக்கைகளை முன்வைத்துப் பேச வேண்டும் என கிழக்கிலங்கை முஸ்லிம் முன்னணி வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறது- என்று அதன் செயலாளர் குறிப்பிட்டுள்ளார்.

# யார் இந்த தானிஷ் அலி?



அரகலய போராட்டக் குழுவின் முன்னணி செயற்பாட்டாளர்களுள் ஒருவரான தானிஷ் அலி விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கும் போது கைத்தொலைபேசியை பயன்படுத்தியதற்காக 14 நாட்கள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டு வெளிக்கடை சிறைச்சாலைக்கு அனுப்பப்பட்டுள்ளார்.

பரகஹதெனியவைச் சேர்ந்த தானிஷ் அலி, துபாய்க்குச் செல்ல முற்பட்டபோது விமானத்தில் வைத்து கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த போது தொலைபேசியை பயன்படுத்தியதற்காக நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு குற்றத்தை ஏற்றுக் கொண்ட பின்பே 14 நாட்கள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டார்.

தானிஷ் அலி குருநாகல் பரகஹதெனியாவைச் சேர்ந்த ஒரு எம்.பி.ஏ பட்டதாரியாவார். ஒன்றரை வருட குழந்தையின் தந்தையான இவர், கால்ப்பந்தாட்ட விளையாட்டுத் துறையில் ஆராய்ச்சியில் ஈடுபட்ட ஒருவராவார். அது தொடர்பாக வெப்தளம் ஒன்றை நடாத்தி வருகிறார்.

பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ விளையாட்டுத்துறை அமைச்சராக இருக்கும்போது கால்ப்பந்தாட்ட விளையாட்டை மேம்படுத்துவது தொடர்பாக பேட்டி கண்டு எழுதியிருந்தார். இவர் யூடியூப் ஒன்றை நடாத்தி வருகிறார்.

இதேநேரம் கடந்த 27ஆம் திகதி வெளியான அரச சிங்களப் பத்திரிகை ஒன்றில் தானிஷ் அலி பற்றி குறிப்பிடப்பட்டிருந்த விடயங்கள் குறித்து பலத்த விமர்சனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரு சகோதரர்கள் மற்றும் ஒரு சகோதரியைக் கொண்ட இவர், அரசியல் மற்றும் கால்ப்பந்து விளையாட்டில் ஈடுபட்டவராவார். இவரது தந்தை ஒரு தமிழராவார். 1980இல் திருமணமான பின் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டுள்ளார்.

பரகஹதெனிய பிரதேசத்தில் சம்பிரதாயபூர்வ முஸ்லிம்களுக்கு அச்சுறுத்தல் விடுக்கும் ஒரு குடும்பமாக பொலிஸாரால் அடையாளம் கண்டிருப்பதாகத் தெரிவித்துள்ளது.

ரூபவாஹினி தொலைக்காட்சி சேவைக்கு அத்துமீறிப் பிரவேசித்து நிகழ்ச்சிகளை இடைநிறுத்தியதற்காகவே இவர் கைது செய்யப்பட்டார்.

# பாகிஸ்தான் உயர்ஸ்தானிகராலயத்தினால் "யவ்ம்-இ-இஸ்தெஹ்சால்" தின அனுஷ்டிப்பு



இந்திய சட்டவிரோத ஆக்கிரமிப்பு ஜம்மு மற்றும் காஷ்மீரில் ஆகஸ்ட் 5, 2019 ல் இந்தியா மேற்கொண்ட சட்டவிரோத மற்றும் ஒருதலைப்பட்ச நடவடிக்கைகளைக நினைவூட்டும் வகையில் "யவ்ம்-இ-இஸ்தெஹ்சால்" தினம் பாகிஸ்தான் உயர்ஸ்தானிகராலயத்தினால் வெள்ளியன்று (05) அனுஷ்டிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் கருத்துத்தெரிவித்த பாகிஸ்தான் உயர் ஸ்தானிகர் மேஜர் ஜெனரல் (ஓய்வு நிலை) உமர் ஃபாரூக் பர்கி அவர்கள், இந்தியாவானது அதன் அரசியலமைப்பின் 370 மற்றும் 35யு விதிகளை ரத்து செய்வதன் மூலம் 2019 ஆகஸ்ட் 5 முதல் காஷ்மீரில் மேற்கொள்ளும் சட்ட விரோதமான மற்றும் ஒருதலைப்பட்சமான நடவடிக்கைகளானது, ஐக்கிய நாடுகளின் பாதுகாப்பு கவுன்சில் தீர்மானங்களை மீறும் செயல் மட்டுமின்றி, சட்ட விரோதமாக ஆக்கிரமிக்கப்பட்ட ஜம்மு - காஷ்மீரின் சிறப்பு அந்தஸ்தை பறிப்பதன் மூலம் அதன் சொந்த அரசியலமைப்பையே மீறுகிறது என்று குறிப்பிட்டார்.

மேலும் அவர் கருத்துத்தெரிவிக்கையில், "பாகிஸ்தான் காஷ்மீரிகளுக்கு எப்போதும் மதிப்பளிக்கிறது. சுயநிர்ணய உரிமைக்கான காஷ்மீரிகள் நியாயமான போராட்டத்தையும், உறுதியான நம்பிக்கையையும் பாகிஸ்தான் பெருதும் போற்றுகிறது. பாகிஸ்தான் தனது அரசியல் மற்றும் இராஜதந்திர உறவுகள் மூலம் இந்திய சட்டவிரோத ஆக்கிரமிப்பு ஜம்மு மற்றும் காஷ்மீரில் இந்தியாவின் மனித உரிமை மீறல்களை சர்வதேச சமூகத்திற்கு தொடர்ந்து விழிப்பூட்டிக்கொண்டிருக்கும். பாகிஸ்தான் எப்போதும் காஷ்மீர் மக்களுக்கு ஆதரவாக நிற்பதோடு அவர்களையும் பாகிஸ்தானியர்களாகவே நோக்கும்.நமது காஷ்மீர் சகோதரர்கள் தங்கள் சுயநிர்ணய உரிமையைப் பெற உதவுவதற்கு பாகிஸ்தான் எப்போதும் துணை நிற்கும் என்பது நமது தேசிய தீர்மானமாகும்" எனவும் குறிப்பிட்டார்.

வர்த்தகம் மற்றும் முதலீட்டு இணைப்பாளர் திருமதி அஸ்மா கமால், பாகிஸ்தான் ஜனாதிபதி டாக்டர் ஆரிஃப் அல்வியின் இந்நாள் குறித்த செய்தியையும், ஊடக இணைப்பாளர் திருமதி கல்சூம் கைசர் பிரதமர் முஹம்மது ஷாபாஸ் ஷரீப்பின் செய்தியையும் பார்வையாளர்களுக்காக வாசித்தனர்.

# நாளை முதல் நாட்டில் குரங்கு அம்மை பரிசோதனைகள் ஆரம்பம்!

(கி. சனுஸ்காந்த)

குரங்கு அம்மை நோய்த் தொற்றாளர்கள் நாட்டில் காணப்படுகின்றார்களா என்பது தொடர்பில் நாளை முதல் பரிசோதனை மேற்கொள்ளப்படும் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

மருத்துவ தொழிநுட்ப சேவைப் பிரிவின் பணிப்பாளர் மருத்துவர் அன்வர் ஹம்தானி சகோதரமொழி ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் இதனைக் குறிப்பிட்டார் .

பொரளை மருத்துவ ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் கண்டி தேசிய வைத்தியசாலை ஆகிய பகுதிகளில் மருத்துவ ஆராய்ச்சி மையங்கள் அமைத்து பரிசோதனைகள் மேற்கொள்ளப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# நாட்டில் மேலும் மூன்று கொரோனா மரணங்கள் பதிவு!

நாட்டில் மேலும் மூன்று பேர் கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்துள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் உறுதிப்படுத்தியுள்ளார்.

குறித்த மரணங்கள் நேற்று பதிவாகியுள்ள நிலையில் அவர்கள் அனைவரும் 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் என தெரிவிக்கப்படுகிறது.

அதன்படி, இலங்கையில் இதுவரை கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 16,581 ஆக அதிகரித்துள்ளது.







NEWS PLUS
WWW.NEWSPLUS.LK
2022 AUGUST 08 - MONDAY

Email: editor@newsplus.lk
FB: newsplustamil

# புதிய அரசியல் சூழ்நிலையில் அமைந்துள்ள நியூஸ் பிளஸ்

நியூஸ் பிளஸ் இவ்வாரம்முதல் வாரத்துக்கு இருமுறை வெளியிடப்படும் இணையப் பத்திரிகையாக வெளிவருகின்றது.

தமிழ்ப் பத்திரிகை உலகில் நீண்ட காலமாக வெளிவந்த பல பத்திரிகைகள் மூடப்பட்டதனால் ஏற்பட்டுள்ள வெற்றிடத்தை நிரப்புவதற்கு நியூஸ் பிளஸ் முயற்சிக்கின்றது.

நியூஸ் பிளஸ் நமது தாய்நாட்டில் புதிய அரசியல் சூழ்நிலை ஒன்று உருவாகி வரும் நிலையிலேயே அதன் பணியை ஆரம்பித்துள்ளது. இப் பத்திரிகை வாரப் பத்திரிகையாக முதலில் வெளிவரும்.

வாசகர்கள் மற்றும் விளம்பர சமூகத்தின் ஆதரவின் அடிப்படையில் தினசரிப் பத்திரிகையாக வெளிவரும்.

நியூஸ் பிளஸ் நாட்டில் சிங்கள, தமிழ், முஸ்லிம் சமூகங்களுக்கிடையே ஒற்றுமையைக் கட்டி எழுப்பி, ஐக்கிய இலங்கையை உருவாக்குவதனை பிரதான இலக்காகக் கொண்டு செயற்படும்.

குறிப்பாக, தமிழ் பேசும் தமிழ், முஸ்லிம் மக்களது அபிலாஷைகளையும் எண்ணங்களையும் வெளி உலகுக்கு எடுத்துச் செல்லும் பிரதான பணியை நியூஸ் பிளஸ் நிறைவேற்றவுள்ளது.

இளைய சமூகத்தினர் மத்தியில் வாசிப்புப் பழக்கம் அருகி வரும் நிலையில் அவர்களிடையே வாசிப்பழக்கத்தை ஊக்குவிப்பது எமது நோக்கமாகும்.

இப்பத்திரிகை நாட்டில் ஜனநாயகம், நல்லாட்சி மற்றும் தேசிய ஐக்கியத்தைக் கட்டி எழுப்புவதற்கு உந்து சக்தியாகச் செயற்படும்.

பத்திரிகைத் துறையில் அனுபவமிக்கவர்கள் மற்றும் புதியவர்களை உள்ளடக்கிய ஆசிரியர்பீடம் நியூஸ் பிளஸினைத் தருவதற்காக அர்ப்பணத்துடன் செயற்பட்டு வருகின்றது.

இதேநேரம் ஊடகவியாளர்கள், பிராந்திய செய்தியாளர்கள் தங்களின் செய்திகளை எமது மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கமுடியும் என்பதனையும் தெரிவித்து, இதன் வளர்ச்சிக்கு வாசகர்களது ஆலோசனைகள் மற்றும் விமர்சனங்களை நியூஸ் பிளஸ் நிர்வாகம் வரவேற்கின்றது.

***

# கால்பந்தாட்ட போட்டியில் திஹாரிய அல் அஸ்ஹர் சம்பியன்



20 வயதுக்குட்பட்ட கம்பஹா வலயப் பாடசாலைகளுக்கு இடையிலான கால்பந்தாட்டப் போட்டியில் திஹாரிய அல்-அஸ்ஹர் தேசிய பாடசாலை சாம்பியன் பட்டத்தை சுவீகரித்துக்கொண்டது.

வெயாங்கொட சென்றல் மற்றும் அல் அஸ்ஹர் தேசியப் பாடசாலைகளுக்கு இடையிலான இறுதிப் போட்டியில், முழு நேர முடிவில் இரு அணிகளும் எந்தவித கோலையும் பெறாமையினால், பெனால்டி ஷூட் சுற்று நடைபெற்றது.

இதில் அல் அஸ்ஹர் 8 கோல்களையும், வெயாங்கொட சென்றால் 7 கோல்களையும் பெற்றுக்கொண்டது.

இதன் அடிப்படையில் 20 வயதுக்குட்பட்ட கம்பஹா வலயப் பாடசாலைகளுக்கு இடையிலான கால்பந்தாட்டப் போட்டியில்

திஹாரிய அல்-அஸ்ஹர் தேசிய பாடசாலை ஒரு கோல் வித்தியாசத்தில் வெற்றி பெற்று சாம்பியன் பட்டத்தை சுவீகரித்துக்கொண்டது.

# கால்பந்தாட்ட போட்டியில், Under 16 பிரிவில் கஹட்டோவிட்ட பத்ரியா அணி சம்பியன்!



கம்பஹா ஸ்ரீ போதி மைதானத்தில் இடம்பெற்ற கம்பஹா கல்வி வலய பாடசாலைகளுக்கு இடையிலான கால்பந்தாட்ட போட்டிகளில், 16 வயதுக்கு உட்பட்ட பிரிவினருக்கான சுற்றுப்போட்டியில் கஹட்டோவிட்ட அல் பத்ரியா மகா வித்தியாலய அணி சம்பியனாகியது.

கடந்த வியாழனன்று இடம்பெற்ற இறுதிப்போட்டியில் மயூரபாத மகா வித்தியாலய அணியை 4 - 0 என்ற கோல் கணக்கில் வீழ்த்தியே கஹட்டோவிட்ட பத்ரியா அணி சம்பியனாக தெரிவானது.

# அவுஸ்திரேலியாவின் ஐக்கிய இலங்கை முஸ்லிம் சங்கத் தலைவராக ரிசா ஜமால் தெரிவு

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

அவுஸ்திரேலியவில் இயங்கும் ஐக்கிய இலங்கை முஸ்லிம் சங்கத்தின் தலைவராக ரிசா ஜமால் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இவர், ஐக்கிய இலங்கை முஸ்லிம் சங்கம் (ருளுஆயுயு) மற்றும் சமூகத்தில் நன்கு அறிந்த நபராக, கிட்டத்தட்ட 2 தசாப்தங்களாக மெல்போர்னில் வசிக்கிறார். அத்தோடு, சுமார் 30 வருட காலம் நியூசிலாந்து மற்றும் அவுஸ்திரேலியாவில் பல சமூக சேவை நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளார். மேலும் பல சந்தர்ப்பங்களில் ஐக்கிய இலங்கை முஸ்லிம் சங்கத்துக்கு பக்கபலமாக இருந்து உதவியுள்ளார்.

CIMA (UK) மற்றும் CA (Australia) உடன் செயற்படும் கொழும்பு ரோயல் கல்லூரியின் பழைய மாணவரான இவர், இப்போது அவுஸ்திரேலியாவின் USMAA (ஐக்கிய இலங்கை முஸ்லிம் சங்க)த்தின் தலைவராக தெரிவு செய்யப்பட்டுள்ளார். இந்நிகழ்வில் முஸ்லிம் கவுன்சில் ஒப் ஸ்ரீலங்காவின் உயர்பீட உறுப்பினர் எம். ரி.எம். றிஸ்வியும் கலந்து கொண்டார்.



# சமுர்த்தி வங்கி பணியாளர்களுக்கான மூன்று நாள் இணையத்தள பயிற்சிநெறி



(ஹஸ்பர்)

திருகோணமலை தம்பலகாமம் பிரதேச செயலக பகுதியில் உள்ள சமுர்த்தி வங்கியாளர்களுக்கான இணையத்தளப்பயிற்சி நெறியொன்று (06) 97ஆம் கட்டை சந்தியில் உள்ள வங்கி கட்டிடத்தில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதி தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், தம்பலகாமம் சமுர்த்தி வங்கி, தம்பலகாமம் கிழக்கு சமுர்த்தி வங்கி உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டதுடன் வளவாளராக திருகோணமலை மாவட்ட சமுர்த்தி இணையத்தளப் பொறுப்பதிகாரி வீ.அன்வர்கான் கலந்து கொண்டார். மூன்று நாட்கள் இடம் பெறும் இந்தப் பயிற்சி நெறியில் இணையத்தளப் பாவனை, வங்கி கணக்கு தொடர்பிலான ஒன்லைன் முறை உள்ளிட்ட பல தகவல் தொழில் நுட்ப முறைமை என பல விடயங்கள் பயிற்சியளிக்கப்படுகின்றன. இதில் சமுர்த்தி தலைமை முகாமையாளர் ஏ.ஆர்.எம்.சித்திக், வங்கி முகாமையாளர் எம்.ஏ.ஹிஸ்புல்லா உட்பட சமுர்த்தி வங்கி ஊழியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# குடிநீர் தொகுதி மக்கள் பாவனைக்காக கையளிப்பு



(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

திருகோணமலை வெள்ளைமணல் நீரோட்டுமுனை பிரதேசத்தில் திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச சபை உப தவிசாளர் முகம்மட் நௌபரினால் குடிநீர்த்தொகுதி புதன்கிழமை (3) பொதுமக்களின் பாவனைக்காக கையளிக் கப்பட்டது.

திருகோண மலை பட்டினமும் சூழலும் பிரதேச சபைக்கு உட்பட்ட குடாக்கரை பகுதியில் சில பகுதிகளில் குடிநீர் பிரச்சினை காணப்படுவதாக அப்பிரதேச மக்கள், சங்கங்கள் மற்றும் நீரோட்டுமுனை அகரம் கல்வி நிலையம் ஆகியன திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச சபை உப தவிசாளர் முகமட் நௌபரிடம் எழுத்து மூலமான கோரிக்கையினையும் முன்வைத்திருந்தனர்.

அதற்கமைய அன்நூரி நிறுவனத்தின் அனுசரணையுடன் ஆழ்துளைக் குழாய்க் கிணறு அமைத்து குடிநீர் தொகுதி அமைத்துக் கொடுக்கப்பட்டது.

இந் நிகழ்வில், கருமலையூற்று முஸ்லிம் வித்தியாலய அதிபர், அப்பகுதி முக்கியஸ்தர்கள், அன்நூரி நிறுவனத்தின் திட்ட முகாமையாளர், வெள்ளைமணல் விளையாட்டுக் கழக நிர்வாகிகள், அகரம் கல்வி நிலைய நிர்வாகிகள், மாணவர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து சிறப்பித்தனர்.



# தெளிவுக்கான தேடல்

வாசகர்களே!
உங்கள் பிரதேசங்களிலுள்ள பொதுவான பிரச்சினைகளையும் நியூஸ்ப்ளஸ் இன் தெளிவுக்கான தேடல் பகுதியூடாக வெளிக்கொண்டுவரலாம்.
செய்திக்குப் பொறுப்பானவரின் அங்கீகாரக்கடிதத்துடன் உங்கள் கட்டுரையையும் இணைத்து **editor@newsplus.lk** எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

## தேய்கிநிற்கும் சம்மாந்துறை கல்வி வளர்ச்சியும், அடுத்த நகர்வும்...



-அமீர் அப்னான்
(இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர்)

சம்மாந்துறையின் கல்வி வளர்ச்சியில் அண்மைக் காலங்களில் ஏற்பட்ட வீழ்ச்சி குறித்து இக்கட்டுரையில் ஆராய்வதற்கு முன்னர் சம்மாந்துறையின் ஆரம்பகால கல்வியியல் வரலாறு பற்றியும் சற்று நோக்குவது சிறப்பாய் அமையும். அந்த வகையில்...

இலங்கையின் தென்கிழக்கு பிரதேசத்திற்கு குறிப்பாக சம்மாந்துறைக்கு தென்னிந்தியாவிலிருந்து வர்த்தக நோக்கமாக வந்த துலுக்கர், சம்மான் காரர் என்போர் கலப்புத் திருமணம் செய்துகொண்டதால் இங்கு நிரந்தர குடிகளாக தங்கிவிட்டனர். அவர்களின் பேச்சு மொழி தமிழ், சமய மொழி அரபு, சமய மொழி தவிர்ந்த ஏனைய மொழிகளை கற்பது சமூகத்தின் எதிர்ப்புக்கும், ஏளனத்துக்குமுரியதாகும். அரபு மொழி ஒஸ்தாதுமார், மௌலானாக்கள், தென்னிந்திய ஆலிம்கள், லெவ்வைகள் என்போரால் திண்ணைப்பள்ளி அமைப்பில் எழுத்து மூலம் இல்லாது, மனப்பாடம் செய்யும் வாய்மொழிக் கல்வியாகவே கற்பிக்கப்பட்டு வந்தன.

பிற்காலத்தில் அறபுத் தமிழில் ஆற்றலுள்ள மார்க்க அறிஞர்களால் தொழுகையடவு, தலைப் பாத்திஹா போன்ற நூல்கள் கையெழுத்துப் பிரதிகளாக எழுதப்பட்டுள்ளன.

தென்னிந்தியாவிலிருந்து குர்ஆனை ஓதவும், எழுதவும் தெரிந்தவர்கள், தென் கிழக்கில் முஸ்லீம் கிராமங்களுக்கு வந்து, பள்ளிவாசல்களில் பள்ளிக் கடமைகளுக்கு அமர்ந்து விட்டனர். நேரத்திற்கு நேரம் தொழுகைக்காக அழைக்கும் பாங்கு ( அதான் ) சொல்லுதல், தொழுகையை ஜமாஅத்தாக நடாத்துதல், பள்ளியைப் பராமரித்தல், துப்பரவாக வைத்திருத்தல் கடமைகளோடு, காலையிலும், மாலையிலும் பிள்ளைகளுக்கு குர்-ஆனை ஓதவும், எழுதவும். கற்றுக் கொடுப்பதும் அவர்களது கடமை களாயிருந்தன.

18ம், 19ம் நூற்றாண்டுகளில் திண்ணைப் பள்ளி மூலம், "ஏட்டுக் கல்வி" என்ற மரபு நிலையிலிருந்து, மேற்கத்திய முறைக்கு கல்வி மாற்றம் பெற மிசனறிமார், திருச்சபையினரின் வருகையே முக்கிய காரணியாக அமைந்ததெனலாம். அவர்கள் மதமாற்றத்தை நோக்கமாகக் கொண்ட கல்வியை நடை முறைப்படுத்த முனைந்ததால், மதமாற்றத்தை ஏற்ற, "விரும்பிய மக்களுக்கே கல்வி" என்ற ஒழுங்கமைப்பு கடைப்பிடிக்கப்பட்டது. இதனால் கல்வியின் பலனை எல்லோராலும் நுகர முடியாமலிருந்தது.

கல்வி நடவடிக்கைகளை, அபிவிருத்தியை இரண்டு காலப் பகுதிகளாகப் பிரித்து நோக்குவது பொருத்தமெனக் கருதுகிறேன்.

* 1960 ஆம் ஆண்டிற்கு முற்பட்ட காலப்பகுதி.
* 1960 ஆம் ஆண்டிற்கு பிற்பட்ட காலப்பகுதி.

1960 ஆம் ஆண்டிற்கு முற்பட்ட காலப் பகுதியை நோக்கினால் : மெதடிஸ்தமிசன் பாடசாலை, தின்னைப் பள்ளிக்கூடம் என்பவைகளைத் தொடர்ந்து 1908ம் ஆண்டு சம்மாந்துறையின் கிழக்கே அரசினர் தமிழ் பாடசாலை ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. சம்மாந்துறையின் மேற்கே மெதடிஸ்த மிசன் பாட சாலை. இவை இரண்டுமே கல்விப் போதனையில் ஈடுபட்டு வந்தன.

அரசினர் தமிழ் பாடசாலையை தர்மப் பள்ளிக்கூடம், வாடியடிப் பள்ளிக்கூடம் என்றெல்லாம் மக்கள் அழைப்பர். முஸ்லிம்களைப் பொருத்த மட்டில் கல்வி மிஷனரிமாரின், திருச்சபையினரின் ஆதிக்கத்தில் இருந்ததினால், முஸ்லிம் சமூகத்தினர், மதவாதிகள் கல்வி கற்பதை, விசேடமாக அன்னிய மொழி கற்பதை ஏளனமாகக் கருதினர், எதிர்ப்பும் தெரிவித்தனர்.

1938 ஆம் ஆண்டு ஆவனித் திங்கள் ஆறாம் நாள் ஊரின் மத்திய பகுதியில் பெண் பிள்ளைகளுக்கு தனியானதொரு பெண்பாடசாலையும் ஆரம்பிக்கப்பட்டு கற்றல் நடைபெற்று வந்தன. அதனைத் தொடர்ந்து மல்கம்பிட்டி கிராமத்தில் 1946ஆம் ஆண்டு ஐப்பசித் திங்கள் முதலாம் நாள் அரசினர் தமிழ் பாடசாலையொன்று ஆரம்பிக்கப்பட்டது.

சம்மாந்துறை நம்பிக்கையாளர் சபைக்குச் சொந்தமான "கேசவன்காலை" என்னும் நான்கு ஏக்கர் தரிசு நிலத்தில் 1950ம் ஆண்டு பங்குனித் திங்கள் மூன்றாம் நாள் சம்பிர்தாய பூர்வமாக கனிஷ்ட வித்தியாலயம் ஆரம்பிக்கப்பட்டமை எம்பதியின் கல்வி அபிவிருத்தி, மேம்பாட்டில் ஓர் மைல் கல்லாகும்.

இன்றைய சம்மாந்துறையின் மத்தியில் கருவாட்டுக்கல் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை 1950ம் ஆண்டு புரட்டாதித் திங்கள் முதலாம் நாள் தன் கல்விக் கண்ணைத் திறந்து கொண்டது. அதனைத் தொடர்ந்தே ஏனைய பாடசாலைகளுக்கு தனது கல்விக் கிளையை விட்டு விருட்சமாக பரவியது. தற்போது சம்மாந்துறை கல்வி வலயத்தில் 71 பாடசாலைகள் காணப்படுகிறது. மூன்று கோட்டங்களாக உள்ளடக்கப்பட்டுள்ளது. நாவிதன்வேலிக் கோட்டத்தில்-23, இறக்காமக் கோட்டத்தில்- 12, சம்மாந்துறைக் கோட்டத்தில் -36 பாடசாலைகள் என வியாபித்திருப்பதனைக் காணலாம்.

குறித்த சம்மாந்துறை கல்வி வலயத்தின் கல்விப் பெறுபேறுகளும், கல்வி சார் புறக்கிருத்திய செயற்பாட்டுச் சாதனைகளும் இலங்கை தேசம் என்ன சர்வதேசமே திரும்பிப் பார்க்கும் அளவுக்கு அமைந்திருந்தமை வரலாற்று உண்மைகளாகும்.

ஆனால் அதே சம்மாந்துறை கல்வி வலயம் மிக அண்மைக் காலங்களில் பெறப்பட்ட உறுதிப்படுத் தப்பட்ட ஆதார ஆவண மூலமான தரவுகளின் படி சம்மாந்துறை கல்வி வலயத்தில் காணப்படும் க.பொ.த. சாதாரண தர பரீட்சைக்கு 25 பாடசாலை களிலிருந்து 2014ம் ஆண்டு தோற்றிய மாணவர்களில் உயர் தரம் (A/L) கல்வி பயில தகைமையுடையோர் கிழக்கு மாகாணத்தில் 4வது இடத்தையும் அதே வேளை தேசிய மட்டத்தில் 28வது இடத்தையும் தொட்டிருந்து சாதனை படைத்த எமது தாய் மண் 2020ம் ஆண்டில் க.பொ.த.(சா/த) பரீட்சைக்கு 885 பேர் தோற்றியும், உயர்தர கல்வி கற்க 372 பேர் தகுதியற்றவர்களாக காணப்படுகின்ற துயர்நிலை.

அதேவேளை 2020ம் ஆண்டின் க.பொ.த.(சா/த) பெறுபேறுகளின்படி சம்மாந்துறை கல்வி வலயமானது கல்முனை கல்வி மாவட்டத்தில் இறுதி இடத்தையும், அம்பாறை மாவட்ட மட்டத்திலும் இறுதி இடத்தையும் அடைந்திருப்பது பெருங் கவலையைத் தோற்றுவித்துள்ளது.

எம் துறையூர் வலயம் 2014ம் ஆண்டில் கிழக்கு மாகாணத்தில் 04ம் இடத்தில் காணப்பட்ட போதிலும் 2020ல் கிழக்கு மாகாணத்தில் 10வது இடத்துக்கு பின்தள்ளப்பட்டுள்ளதையும், தேசிய மட்டத்தில் 78வது இடத்துக்கும் ஓரங்கட்டப்பட்ட அவலநிலைக்குச் சென்றடைந்ததையும் காணக் கூடியதாகவுள்ளது.

இவ்வவல நிலை தொடர்பாக கற்பிக்கும் ஆசிரிய பெருந்தகைகள், அதிபர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், கோட்டக் கல்வி அதிகாரிகள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், விசேடமாக சம்மாந்துறை வலயக் கல்விப் பணிப்பாளர் உட்பட அனைவருமே பொறுப்புக் கூற வேண்டியவர்களே!!

* இரண்டாம் மொழிக் கற்கை நெறியையும், ஆங்கில மொழி அறிவையும் மேம்படுத்தும் வழிமுறைகளை பாடசாலை ரீதியாகவும், பிரத்தியேக ரீதியாகவும் ஆரம்பித்தல்.
* கல்வியின், பாட திட்டமானது தலைமை வகிக்கும் பண்புகளை கற்பிப்பதாகவும், குழுபற்று, பங்களிக்கும் திறன், மென்திறன் மேம்பாடு மற்றும் சமுதாய இன்னல்களை எதிர்கொள்ளும் திறன் ஆகியவைகளை வளர்ப்பதாகவும் இருக்க வேண்டும்.
* புத்தகங்கள் மற்றும் பத்திரிக்கைகள் கொண்ட நூலகம், ஆசிரியர் மற்றும் மாணவர்களுக்கு பிராந்திய ரீதியாக வழங்கப்பட வேண்டும்.
* திறன் கொண்ட பாடசாலையின் வளங்களைக் கொண்டு, திறன் குறைந்த பாடசாலையை முன்னேற்றும் திட்டத்தை அமுல்படுத்த முயற்சித்தல்.
* சமயம், கலை ரீதியான பாடநெறிகள் பின் தங்கி கொண்டிருப்பதனால் அதற்கான மாற்று வழிகளை, செயன்முறை ரீதியான கல்விக் கொள்கையை கொண்டு வரல்.
* களப்பயணம் மற்றும் கல்விச் சுற்றுலா பாடத்திட்டத்தில் ஒருகிணைந்த ஒன்றாக இருக்க வேண்டும்.
* போதைவஸ்து அதிகரித்த காலம் என்பதனால், உடல் - உள சோதனை (Counseling) நிலையங்களை பாடசாலைகளில் ஆரம்பித்தல்.

இவைகளில் கவனமெடுக்க கல்விச் சமூகம் மாத்திரமல்லாது, நலன்விரும்பிகளும், பொது அமைப்புக்களும், ஊரின் முக்கிய முச்சபைகளும், கல்வியலாளர் சமூகமும் சற்று நேரம் செலவு செய்வதற்கு தயாரா?? என்ற வினாவினை விடுக்கிறேன்.

## தலவாக்கலை வீடொன்றில் புகுந்த சிறுத்தைப்புலி






(மலைவாஞ்ஞன்)

தலவாக்கலை பகுதியில் வீட்டுக்குள் புகுந்த சிறுத்தப்புலி உயிருடன் மீட்கப்பட்டுள்ளது.

சிறுத்தை தாக்கியதில் குடும்பஸ்தர் ஒருவர் நுவரெலியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சம்பவம் தலவாக்கலை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மல்லிகைப்பூ லோகி கூம்வூட் தோட்டத்தில் இன்று காலை 7 மணி அளவில் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் குறித்து தெரிய வருவதாவது, நேற்று இரவு குறித்த சிறுத்தை புலி உணவுக்காக விலங்கு ஒன்றினை விரட்டி சென்ற போது கூரையினை உடைத்து கொண்டு வீட்டினுள் வீழந்துள்ளது. சத்தம் கேட்ட வீட்டார் இரண்டு கதவுகளை திறந்து கொண்டு வீட்டைவிட்டு ஓடியுள்ளனர்.

அதனை தொடர்ந்து சிறுத்தை சென்று விட்டது என்று காலை 7 மணி அளவில் வீட்டில் இருந்தோர் வெளியேறிய சந்தர்ப்பத்தில் அயல்வீட்டுக்காரர் டார்ச் லைட் அடித்து பார்த்த சந்தர்ப்பத்தில் சிறுத்தைப்புலி கட்டில் அடியில் மறைந்திருந்துள்ளது. அவர்மீது சிறுத்தை பாய்ந்து தோள்பட்டை மற்றும் கைகளையும் காயப்படுத்தி உள்ளது.

கடும் காயங்களுக்கு உள்ளான குறித்த நபர் நுவரெலியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் மேற்கொண்ட ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

அதனை தொடர்ந்து வன இலாக்க மற்றும் மிருக வைத்தியர்கள் இணைந்து சிறுத்தை புலியினை மயக்கமடைய செய்து உயிருடன் மீட்டு நுவரெலியா வனபாதுகாப்பு காரியாலயத்திற்கு எடுத்துச் சென்றுள்ளனர். சம்பவம் குறித்த மேலதிக விசாரணைகளை தலவாக்கலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றர்.



# பொருளாதார நெருக்கடியில் இருந்து இலங்கை மீண்டெழுவது எப்படி?






எம்.எஸ். அமீர் ஹுசைன்

வரலாற்றில் ஒருபோதும் சந்தித்திராத அளவிற்கு மிக மோசமான பொருளாதார நெருக்கடியை இலங்கை மக்கள் சந்தித்த வருடமாக 2022 ஆம் ஆண்டு அமைகின்றது. 2021 ஆம் ஆண்டு இறுதிப் பகுதியில் 11மூ வீதமாக இருந்த பணவீக்கம் 2022 ஜூலை மாதம் 31 ஆம் திகதி ஆகும் போது 62மூ வீதம் என்ற நிலைக்கு உயர்வடைந்திருப்பதாக பொருளாதார குறிகாட்டிகள் தெரிவிக்கின்றன. அவ்வாறாயின் அந்த அளவிற்கு உள்நாட்டில் பொருட்களின் விலைகளிலும் 300 முதல் 400 வீதம் வரையிலான விலை உயர்வும் ஏற்பட்டிருக்கின்றது. அதன் காரணமாக வறுமைக் கோட்டிற்கு கீழ் மட்ட நிலையில் வாழும் மக்கள் உட்பட சாதாரண வருமானம் பெறும் குடும்பங்களை சேர்ந்த மக்கள் வரை கடுமையான துயரங்களை சந்திக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கின்றது. வேலை இன்மை உயர்வடைந்து மக்களது தலைக்குரிய வருமானம் வீழ்ச்சி கண்டிருக்கின்றது.

இந்த பொருளாதார நெருக்கடியால் மக்களுக்கு ஏற்பட்ட துயரம் நிறைந்த வாழ்வியல் அனுபவத்தின் எதிரொலியாக 2022 ஜூலை 09 ஆம் திகதி ஏற்பட்ட மக்கள் எழுச்சிய காரணமாக பதவியல் இருந்த ஜனாதிபதியும் அதற்கு முன்னர் பிரதமர் மற்றும் நிதி அமைச்சர் ஆகியோர் பதவிகளை துறக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. 69 இலட்சம் மக்களது வாக்குகளால் தேர்தல் மூலம் தெரிவாகிய ஜனாதிபதியையும் நாட்டை விட்டு துறத்தி 3ஃ2 பெரும்பான்மை பலத்துடன் பதவிக்கு வந்த அரசாங்கத்தை மக்கள் கவிழ்த்து பதவி இறக்கியதால் புதிய ஜனாதிபதியாக 46 வருட கால அரசியல் அனுபவத்தை பெற்றவராக ஒரம் கட்டப்பட்ட நிலையில் அவர் தலைமைப் பதவி வகித்த ஐக்கிய தேசிய கட்சி துவம்சம் செய்யப்பட்ட நிலையில் இருந்து யாரும் எதிர்பாராத நிலையில் மீள எழுச்சி பெற்றவராக ரனில் விக்கிரமசிங்கா ஜனாதிபதியாக பாராளுமன்றத்தால் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

2022 ஒகஸ்ட் 03 ஆம் திகதி 09 ஆவது பாராளுமன்றத்தில் மூன்றாவது கூட்டத்தொடரை சிம்மாசனப் பிரசங்கம் மூலம் ஆரம்பித்து வைத்த அவர் நாட்டை மீள கட்டியெழுப்புவதற்காக அனைத்து கட்சிகளையும் உள்ளடக்கியதாக புதிய சர்வ கட்சி அரசாங்கம் ஒன்றை ஏற்படுத்த இருப்பதாகவும் அதற்கு அனைவரும் கைகோர்க்க வேண்டும் என்று அழைப்பு விடுத்துள்ளார். இவ்வாறான ஒரு சூழ்நிலையில் நாடு மீண்டும் புத்துயிர்ப்பு பெற்ற மீண்டெழ வேண்டுமானால் நாட்டில் அரசியல் ஸ்தீர நிலையும் பொருளாதார சுபீட்சமும் ஏற்பட வேண்டும்.

அரசியல் ஸ்தீர நிலை ஏற்பட தற்போதுள்ள அரசியல் முரண்பாடுகளுக்கு முடிவு கட்டப்பட்டு எதிர்ப்புக்களை கைவிட்டு ஜனாதிபதிக்கும் அமைச்சரவை உள்ளடங்கி அரசாங்கத்திற்கும் மக்கள் கால அவகாசம் வழங்கி பொறுமையாக இருந்து நடவடிக்கைகளை முன்னெடுக்க அவகாசம் வழங்க வேண்டும். நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கின்ற அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் அதற்காக ஒத்துழைக்க வேண்டி இருக்கின்றது. 2029 ஆம் ஆண்டு பதவிக்கு வந்த ஜனாதிபதியே அவரது பதவிக்காலம் முடிவடைய முன்னர் பதவியை விட்டு ஓடிவிட்டாதல் அந்த வெற்றிடத்திற்காக தெரிவாகியுள்ள ஜனாதிபதி ரனில் விக்கிரமசிங்கா எஞ்சியுள்ளத பதவிக்காலத்தை 2024 ஆம் ஆண்டு ஜூன் மாதம் வரையில் நிறைவு செய்ய இருப்பதோடு 2020 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் பதவிக்கு வந்த பாராளுமன்றம் அடுத்த ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும் வரையில் பதவி வகிக்க இருக்கின்றது.

ஆனாலும் இந்த காலப்பகுதிக்குள் மூன்று முறை அமைச்சாரவை மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன.

இருந்தாலும் இந்த ஆட்சி தொடர்பாக நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை பலம் இருந்தாலும் நாடாளுமன்றத்திற்கு வெளியில் மக்களின் ஆதரவோ வரவேற்போ இல்லை. ஏனெனில் ஏற்கனவே ராஜபக்ஷ யுகத்தில் பதவியில் இருந்த அமைச்சர்களே மீண்டுமம் இந்த ரனிலின் தலைமையிலான ஆட்சியிலும் அமைச்சர்களாக உள்ளனர். கடந்த 2019 ஆம் அண்டு முதல் 2022 ஜூலை 09 ஆம் திகதி வரையில் ஆட்சி கவிழும் வரையான காலப்பகுதியில் நாட்டில் படு மோசமான ஊழல்களும் அரச சொத்துக்களை சூரையாடல்களும் இடம்பெற றதாலே நாடு இந்தளவுக்கு மோசமான பொருளாதார நெருக்கடியை சந்தித்ததாக மக்கள் கருதுகின்றனர். அதனால் பொதுஜன பெரமுண கட்சியின் அரசாங்கத்தில் பதவியில் உள்ள அமைச்சர்கள் மற்றும் உயர் மட்ட அதிகாரிகள் முதல் கீழ் மட்டம் வரையில் மக்கள் நம்பிக்கை இழந்து அதிருப்தியில் இருந்து வருகின்றார்.

இப்படியான ஒரு சூழ்நிலையில்தான் இந்த நாட்டு மக்கள் அரசியல் மற்றும் பொருளாதார ஸ்தீர நிலையை எதிர்பார்க்கின்றனர். அரசாங்கமும் அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டி இருக்கின்றது. அரசியல் ஸ்தீர நிலையை ஏற்படுத்த அனைத்து கட்சிகளையும் உள்ளடக்கிய சர்வ கட்சி அரசாங்கம் ஒன்றை ஏற்படுத்தல், அரசியல் அமைப்பிற்கான 21 ஆவது திருத்தம் மூலம் மீண்டும் ராஜபக்ஷ ஆட்சியில் செல்லுபடியற்றதாக்கிய அரசியல் அமைப்பிற்கான 19 ஆவது திருத்தத்தை மீண்டும் நடைமுறைக்கு கொண்டு வருவது, மக்கள் எதிர்ப்புக் களையும் ஆர்ப்பாட்டங்களை அடக்குவதற்காக அவசரகால நிலைமைய நடைமுறைக்கு கொண்டு வந்திருப்பது போன் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இவை எல்லாவற்றிற்கும் மேலாக பொருளாதாரத்தை மீள கட்டியெழுப்புவதற்காக எடுக்க வேண்டிய நடவடிக்கைகளே முக்கயத்துவம் வாய்ந்ததாக அமைகின்றது. ஒரு நாடு பொருளாதார ரீதியாக அபிவிருத்தியை அடைவதற்கு எந்தெந்த துறைகளில் கவனம் செலுத்த வேண்டும் என்பதே முக்கியமானதாக அமைகின்றது. நாட்டின் மொத்த தேசிய வருமானத்தை அதிகரிக்கச் செய்வதற்கு தேவையான பல துறைகளில் முன்னேற்றம் ஏற்பட வேண்டும்.

உள்நாட்டில் உணவு உற்பத்தியை அதிகரித்தல், ஏற்றுமதித் துறைகளை அபிவிருத்தி செய்தல், அதற்கு தேவையான வசதிகளையும் சலுகைகளையும் வழங்குதல், இறக்குமதிக்காக செலவிடும் தொகைகளை கட்டுப்படுத்துதல், அந்நிய செலாவணி வருமானத்தை அதிகரிக்க தேவையான நடவடிக்கைகளை எடுத்தல், அதற்கான வெளிநாட்டு தொழில் துறைகள் மற்றும் உள்ளாசப் பிரயாணத்துறையை மேம்படுத்த நடவடிக்கைகளை எடுத்தல், உள்நாட்டில் உரிய முறையில் அறவிட வேண்டிய வரிகளை அறவிடல், வரி செலுத்தாமல் ஏப்பம் விடும் பாரிய முதலாளிமாருக்கு எதிராக நடவடிக்கைகளை எடுத்தல், உட்பட பல நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்க வேண்டி இருக்கின்றது.

ஏற்கனவே 2020 ஆம் ஆண்டில் இருந்து ஏற்பட்ட கொரோனா வைரஸ் தொற்று பரவல் காரணமாக ஏற்பட்ட பொது முடக்கம் காரணமாக இந்த துறைகளில் ஏற்பட்ட பாதிப்பு பின்னடையை இன்னும் வழமை நிலைக்கு கொண்டு வர முடியாதிருக்கின்றது. அத்துடன் நாடு பாரிய வெளிநாட்டு கடன் சுமையால் பாதிக்க ப்பட்டிருக்கின்ற நிலையில் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளுடனான இராஜதந்திர உறவை பலபடுத்துவதன் மூலம் தற்போதைய இலங்கை மத்திய வங்கியில் காலியாகி இருக்கின்ற ஐக்கிய அமெரிக்க டாலரிலான விஷேட சிறப்பெடுப்பு ஒதுக்கை (ஞனுசு) அதிகரிக்க செய்வதன் மூலம் வீழ்ச்சி கண்டுள்ள இலங்கையின் ரூபாவின் பெருமதியை அதிகரிக்க துரிதமான நடவடிக்கைகளை எடுத்தல் என்பன நாட்டின் பொருளாதாரத்தை முன்னேற்றுவதற்கு எடுக்க வேண்டிய நடவடிக்கைகளாகின்றன.

அத்துடன் கடந்த காலங்களில் இலங்கைக்கு வெளிநாடுகளால் வழங்கப்பட்டுள்ள கடன் மற்றும் உதவிகளில் மேற்கொள்ள வேண்டிய திட்டங்களில் பாரிய ஊழல்களும் மோசடிகளும் இடம் பெற்றிருப்பதாக அது தொடர்பாக ஆராய்ந்த “பேர்க் குழு” (நுகஊ) அறிக்கைகள் மூலம் தெரிய வந்திருப்பதால் ஆட்சியாளர்களால் செய்யப்படும் ஊழல்களை கட்டுப்படுத்த நடவடிக்கை களை எடுத்தல் என்பன இலங்கையை பொருளாதார வீழ்ச்சியிலும் பின்னடைவிலும் இருந்து மீள கட்டியெழுப்புவதற்கான அவசர தேவைகளாகும்.

இற்றைக்கு 74 வருடங்களுக்கு முன்னர் 1948 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 06 ஆம் திகதி அப்போதைய இரண்டாம் உலக மகாயுத்த சூழலில் ஐக்கிய அமெரிக்கா ஜப்பானின் ஹிரொசிமா நகர் மீது லிட்டில் போர்ட்ட என்ற அணுகுண்டை வீசியதன் மூலம் ஜப்பானுக்கு மிக மோசமான அழிவை ஏற்படுத்தியது. இந்த அணுகுண்டு வீசப்பட்டதால் ஹிரொசிமா நகரில் அமைந்திருந்த சுமார் 78000 கட்டிடங்கள் தரைமட்டமாகின. சுமார் 300,000 மக்கள் செத்து மடிந்தனர். ஹிரொசிமா நகரில் இருந்து 12 கிலோ மீட்டர் தொலைவுக்கு அப்பால் இந்ா குண்டின் தாக்கம் உணரப்பட்டதோடு இன்றும் கூட அதனால் ஏற்படும் பாதிப்பு தொடர்ந்து கொண்டிருக்கின்றது.

இந்தளவிற்கு மோசமாக பாதிக்கப்பட்ட ஜப்பான் அத்தனை அழிவுகளையும் தாங்கிக் கொண்ட நாடாக படிப்படியாக சுய முயற்சியால் எழுந்து நின்று இன்றய ஆசியாவில் பொருதார ரீதியாக அபிவிருத்தி கண்ட குட்டி வல்லரசாக திகழ்கின்றது என்றால் அதற்கு அந்நாட்டு மக்கள் செய்த அர்ப்பணிப்புக்களும் ஈடுபாடுமே காரணமாகின்றது. இவ்வாறு பார்க்கின்ற போது தற்போது எமது நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியால் சுமார் 02 கோடி 30 இலட்சம் மக்களும் ஏதோ ஒருவகையில் பாதிக்கப்பட்டுள்ளனர்.



அவ்வாறாயின் இலங்கை மீண்டும் பொருளாதார ரீதியாக மீள் பிறப்பை அடைய வேண்டுமானால் அமைச்சர் பதவிகளுக்கு சுக போகங்களுக்கும் ஆசைப்படும் அரசியல் வாதிகள் மட்டுமல்லாது ஒவ்வொரு பிரசையும் ஏதோ ஒருவகையில் நாட்டிற்காக குறுகிய காலத்திற்கு அர்ப்பணிப்போடு தியாகங்களை செய்ய வேலண்டி இருக்கின்றது.

# 24 ஆயிரம் ஏக்கருக்கு மேல் விவசாய காணியுள்ள சம்மாந்துறையில் 52 சதவீத மக்கள் அரச உதவியில் தங்கியிருப்பது கவலையளிக்கிறது!

## – சம்மாந்துறை தவிசாளர் நௌசாட் தெரிவிப்பு!

(நூருல் ஹுதா உமர்)

வறுமைக்கோட்டுக்கு கீழ் வாழ்கின்றோம் என்ற பிரகடனத்துடன் சம்மாந்துறையில் ஏறத்தாழ 52 சதவீதமான குடும்பங்கள் அரச உதவியிலையே தங்கி வாழ்கின்றது. இதனை சம்மாந்துறையின் குடிமகனாக ஏற்றுக்கொள்ள முடியாதுள்ளது. என்னுடைய மனதில் நீண்டகாலமாக இருந்துவரும் இந்த மனக்குறையைப் பற்றி சம்மாந்துறை பிரதேச செயலாளரிடம் தெரிவித்திருக்கிறேன். இது வெட்கப்படும் விடயமாகவே உள்ளது. 24 ஆயிரம் ஏக்கருக்கு மேற்பட்ட விவசாய காணிகள் உள்ளது. அதில் பயிர்செய்கைகளும் இடம்பெறுகிறது. ஆனால் 52 சதவீதமான குடும்பங்கள் அரச உதவியிலையே தங்கி வாழ்கின்றது என்றால் அது எப்படி நியாயப்படுத்த முடியும் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், சம்மாந்துறை பிரதேச சபை தவிசாளருமான ஏ.எம்.எம். நௌசாட் கேள்வியெழுப்பினார்.

நேற்று இடம்பெற்ற சம்மாந்துறை சமூக சேவைகள் மற்றும் வாழ்வாதார மேம்பாட்டு ஒன்றிய அங்குரார்ப்பண நிகழ்வில் பிரதம அதிதியாகயாக கலந்துகொண்டு தொடர்ந்தும் உரையாற்றிய அவர், மாற்றங்கள் அவரவர் மனதிலிருந்தும், அடிப்படையிலிருந்து வர வேண்டும். அரச அல்லது தனியார் உதவிகள் சரியாக இனங்கண்டு உரியவர்களுக்கு கொண்டு சேர்க்கப்பட வேண்டும். பிழையான தகவல்களை வழங்கி அரச, தனியார் உதவிகள் பெறுவது பாவம் (பிழை) என்ற நிலைக்கு மக்களாகிய நாம் வர வேண்டும். அதைத்தான் இறைவனும் ஏற்றுக்கொள்வான்.

நாட்டின் நிலையை கருத்தில் கொண்டு உணவின்றி இருக்கும் மக்களுக்காக ஏதாவது செய்வது தொடர்பில் சம்மாந்துறை முக்கிய அமைப்புகளுடன் அண்மையில் கலந்துரையாடல் ஒன்றை செய்திருந்தேன். ஆனால் சம்மாந்துறையின் இளைஞர்கள் தாமாக முன்வந்து அந்தப்பணியை வெற்றிகரமாக செய்தார்கள். இதன்போது சேகரிக்கப்பட்ட அவர்களின் தகவலைகளை அடிப்படையாக கொண்டு இனிவரும் காலங்களில் பல்வேறு வேலைத் திட்டங்களை முன்னெடுக்க முடியும் என்று நம்புகிறேன். சமூக சேவைகள் இறைவனுக்கு பயந்து முன்னெடுக்கப்பட வேண்டும். பயனாளிகளை பகிரங்கப்படுத்தி அவர்களை பொதுவெளியில் சங்கடப்படுத்துவது எப்போதும் யாராலும் ஏற்றுக்கொள்ள முடியாதது.

இன்று நாம் இருக்கும் நிலைக்கு நாம் எல்லோரும் பொறுப்பாளிகள். வருமானத்தை மீறி செலவு செய்யும் பழக்கத்தினால் தான் இன்று இந்த நிலை உருவாகியுள்ளது. சம்மாந்துறை பிரதேசத்தில் 300 க்கு மேற்பட்ட சமூக சேவைகள் அமைப்புக்கள் இருக்கிறது. ஆனால் இயங்குநிலையில் உள்ளது விரல்விட்டு என்னும் அளவுக்கே இருக்கிறது.

இதனை பெரும் குறைபாடாக நான் பார்க்கிறேன். என்னுடைய பொதுவாழ்வில் நான் நிறைய விடயங்களை அறிந்துகொண்டு அதனூடாக என்ன வழிகாட்டல் இருக்கின்றது என்று பார்க்கிறேன்.



சமூக சேவைகள் மூலம் சமூகம் கட்டியெழுப்பட வேண்டும். இப்போது அரசியல் எனும் சொல் மக்களுக்கு மிகவும் வெறுப்பாக மாறியுள்ளது. சமூக சேவை அமைப்புக்களுடன் இணைந்து பிரதேசத்தின் கட்டமைப்பில் மேம்பாட்டை உருவாக்க எப்போதும் தயாராக இருக்கிறோம் - என்றார்.

# "சிறந்த ஊடகவியலாளர்" விருது பெற்றார் ஊடகவியலாளர் எம்.எஸ்.எம்.ஸாகிர்



கிழக்கு இளைஞர் அமைப்பின் 4 ஆவது ஆண்டு மாநாடு கடந்த சனிக்கிழமை (30) சாய்ந்தமருது பிரதேச செயலக கூட்ட மண்டபத்தில் இடம்பெற்ற வேளை, ஊடகத்துறையில் தன்னலம் பாராது சிறந்த பணியாற்றிவரும் ஊடகவியலாளருக்கான விருது வழங்கலில் இவ்வருடத்தின் (2022) "சிறந்த ஊடகவியலாளருக்கான விருது" மெட்ரோ லீடர் பத்திரிகையின் முன்னாள் செய்தி ஆசிரியரும், ஊடகவியலாளரும், பல்துறைக்கலைஞருமான எம்.எஸ்.எம். ஸாகிருக்கு வழங்கி கௌரவிக்கப்படுவதைப் படத்தில் காண்க.

(சியாத் எம். இஸ்மாயில்)

# ஸ்டார் கல்லூரியின் "அறிவுச்சமர்" இறுதிப்போட்டி பரிசளிப்பு!





(நூருல் ஹுதா உமர்)

கல்முனை ஸ்டார் கல்லூரியினால் முதன்முறையாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த "அறிவுச்சமர்" போட்டித் தொடரின் இறுதிப்போட்டியும் பரிசளிப்பு நிகழ்வும் கல்முனை தனியார் வரவேற்பு மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வின் பிரதம அதிதியாக தென் கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் ரமீஷ் அபூபக்கர் கலந்து கொண்டார்.

அத்துடன், தென் கிழக்கு பல்கலைக்கழக சிரேஷ்ட உதவிப்பதிவாளர் ஏ.எச். நபார், கல்முனை பொலிஸ் நிலைய பிரதம பொலிஸ் பரிசோதகர் ஏ.எல்.ஏ.வாஹிட் மற்றும் கல்முனை கமு / அஸ் - சுஹரா வித்தியாலய அதிபர் எம்.எச்.எஸ். ஆர்.மஜீதியா ஆகியோர் கௌரவ அதிதிகளாக கலந்து கொண்டதுடன், ஆசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் மாணவர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

மாணவர்களின் அறிவு, தேடல் மற்றும் சுயகற்றல் என்பவற்றை மேம்படுத்தும் நோக்கில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இப்போட்டி நிகழ்ச்சியானது, லீக் போட்டி, காலிறுதி, அரையிறுதி மற்றும் இறுதிப்போட்டி என பல சுற்றுக்களாக இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சென்னையில் கௌரவ டாக்டர் பட்டமளிப்பு விழா






சென்னை தி.நகரில் உள்ள தி ரெசிடென்ஸி டவர் நட்சத்திர ஹோட்டலில் அமெரிக்கா தேசிய வணிக பல்கலைக்கழகம் கௌரவ டாக்டர் பட்டமளிப்பு விழா நடைபெற்றது விழாவிற்கு அமெரிக்க தேசிய வணிக பல்கலைக்கழக உலக ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர் ஆண்டனி டெக்ஸ்டர் பெர்னாண்டோ தலைமை வகித்தார். விழாவிற்கு வந்த அனைவரையும் உலக தமிழ் இணைய பல்கலைக்கழக துணைவேந்தர் டாக்டர் ராம் பெர்னாண்டோ வரவேற்று பேசினார்.


விழாவில் பாரதிய சாகித்ய ரத்னா விருது என்பது உலக அளவில் எழுத்துத் துறையில் சிறந்து விளங்குபவர்களை அங்கீகரிக்கும் மிகவும் நம்பிக்கைக்குரிய விருது ஆகும். இந்தியாவில் பிஎஸ்ஆர் விருதுகள் வெற்றியை அங்கீகரிப்பது, பங்களிப்புகளை அங்கீகரிப்பது, முயற்சிகளைப் பாராட்டுவது மற்றும் பங்களிப்பாளர்களின் வளர்ச்சியைக் கொண்டாடுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. உலக அளவில் எழுத்துத் துறையில் சிறந்து விளங்குபவர்களை அங்கீகரிக்கும் நம்பிக்கைக்குரிய விருது "பாரதிய சாகித்ய ரத்னா விருது" ஆகும். அந்த வகையில் இந்திய-சிலோன் நட்புறவு அமைப்பின் ஊடக இத்துறையின் பணியை அங்கீகரிக்கும் முகமாக மூத்த பத்திரிக்கையாளர் திருச்சி எம்.கே. ஷாகுல் ஹமீதுக்கு பாரதிய சாகித்ய ரத்னா விருதுகளை இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தேசிய தலைவர் பேராசிரியர் கே.எம். காதர் மொகிதீன், சினிமா இயக்குநர் பாரதிராஜா, இயக்குநர் சீனு ராமசாமி, நடிகர் விமல் ஆகியோர் வழங்கினார்கள்.

# சாய்ந்தமருது ஆஸ்பத்திரி வீதியில் உள்ள ஒடுக்கமான பாலம் ஆபத்தான நிலையில்!

(நூருல் ஹுதா உமர்)

மக்களின் பிரதான போக்குவரத்துப் பாதைகளில் ஒன்றான சாய்ந்தமருது பழைய ஆஸ்பத்திரி வீதியிலுள்ள தோணாவுக்கு மேலாக குறுக்காக அமைக்கப்பட்டுள்ள ஒடுக்கமான பாலம் பல தசாப்தங்களாக புனரமைப்பு செய்யப்படாமல் சேதமடைந்த நிலையில் பாவனைக்கு உகந்ததற்றதாக மாறியுள்ளதுடன் அந்த பாலத்தில் பயணிப்போர் அச்சத்துடனையே பயணித்து வருகின்றனர்.


அம்பாறை மாவட்டம் கல்முனை மாநகர சாய்ந்தமருது பிரதேசத்தில் அமைந்துள்ள இப்பாலத்தின் ஊடாக சாய்ந்தமருது பழைய ஆஸ்பத்திரி உப தபாலகம், கமு/ கமு/ றியாலுல் ஜன்னா வித்தியாலயம், தலைவர் அஷ்ரஃப் ஞாபகர்த்த பூங்கா, பள்ளிவாசல், பாதுகாப்பு படை தளம், மீனவர்களின் தொழில் நிமிர்த்தமான பயணங்கள் என்பனவத்திற்கு செல்ல வேண்டும். அபாயகரமான நிலையில் உள்ள இந்த ஒடுக்கமான பாலம் உறுதியான நிலையில் விரிவாக்கப்படல் வேண்டும் என்பது சாய்ந்தமருது மக்களின் விருப்பமாகும்.



தொடர்ந்தும் இப்பிரதேச மக்களால் தெரிவு செய்யப்பட்டு வருகின்ற மக்கள் பிரதிநிதிகள் இப்பிரச்சினைக்கு தீர்வை தருவதாக தேர்தல் காலங்களில் மேடைகளில் வாக்குறுதி வழங்கினாலும் கூட அது இன்னும் நிறைவேற்றப்படவில்லை என பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் அதிகாரிகள் பலரும் பல்வேறு காரணங்களை கூறிவருகின்ற நிலையில் தமக்கான உச்சகட்ட அதிகாரத்தை பயன்படுத்தி இந்த பிரச்சினைக்கு தீர்வை வழங்க முன்வரவேண்டும் என சம்பந்தப்பட்ட திணைக்களத்தினரை மக்கள் கேட்டுக்கொள்கின்றனர்.





# எதிரிகளை நண்பர்களாக்கி, நண்பர்களை எதிரியாக்கி வென்ற ரணிலின் வியூகம்!

- நூருல் ஹுதா உமர்

**ரணில் - அதாஉல்லாவின் திடீர் காதல்**

ரணில் விக்கிரமசிங்கவின் வீட்டை அநியாயமாக எரித்தார்கள், நாட்டை நிர்வகிக்கின்ற பொறுப்பை அவருக்கு இறைவன் வழங்கி உள்ளார். ஜனாதிபதியை பாராளுமன்றம் மூலமாக தெரிவு செய்கின்ற வாக்கெடுப்பில் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரித்தமை அரசியல் செய்வதற்கான தருணமாக இருக்கவில்லை. அதனால் நான் அரசியல்வாதியாக அன்றி வாக்காளராகவே நடந்து கொண்டேன். தெளிந்த சிந்தனை உடைய எந்த வாக்காளரும் எடுக்க கூடிய தீர்மானத்தையே எடுத்து வாக்களித்தேன். அது மிக சரியான தீர்மானமாக அமைந்தது. தற்போதைய நெருக்கடி சூழலில் நாட்டை மீட்டு காப்பாற்ற ரணில் விக்கிரமசிங்கவால்தான் முடியும். என்று தேசிய காங்கிரஸ் தலைவர் ஏ.எல்.எம். அதாவுல்லா தெரிவித்த கருத்தின் ஆழ அகலம் காலத்தினால் கணித்து முஸ்லிங்கள் தொடர்பில் ரணிலின் எண்ணத்தினால் வகுத்து நாட்டின் நிலைகளினால் பிரித்து ஆராயப்பட வேண்டியது.

பிரதமராக, எதிர்க்கட்சி தலைவராக, பாராளுமன்ற உறுப்பினராக இருந்த ரணிலை கடுமைமையாக விமர்சித்த முஸ்லிம் அரசியல்வாதிகளில் அதாஉல்லா எப்போதும் முதன்மையானவர். அப்படிப்பட்ட அதாஉல்லா இது ரணில் விக்கிரமசிங்கவுக்கு கிடைத்து உள்ள மிக உன்னதமான உயர்வு. இறைவனின் அருட்கொடை ஆகும். இப்படி ஒரு மகத்தான வாய்ப்பு அவருக்கு மீண்டும் கிடைக்குமா? என்பது தெரியாது. ஆகவே அவரும் இம்மகத்தான வாய்ப்பை திறம்பட பயன்படுத்துவார் என்பது திண்ணம். அனுபவசாலிகளையும், திறமைசாலிகளையும் அரவணைத்து நடப்பார். ஆழி பேரலை அனர்த்தத்தை தொடர்ந்து அந்நாட்களில் எல்லோர் மத்தியிலும் நல்லிணக்கம் ஏற்பட்டது. அது தற்போதைய தருணத்திலும் உணரப்பட்டு உள்ளது என்று அறிக்கை விட்ட அதாஉல்லா இதனை அமைச்சர் பதவியொன்றுக்காக விட்ட "காக்காப்பிடிப்பாக" மட்டும் கொள்ளமுடியாது. ஏனெனில் ராஜதந்திர முதிர்ச்சி கொண்ட ரணிலினால் நாட்டை முன்னேற்ற முடியும் என்பது எல்லோரது எதிர்பார்ப்பாகவும் அமைந்துள்ளது.

ஜனாதிபதியாக ரணில் தெரிவாக முன்னர் அவரது நீண்டநாள் எதிரிகட்சியான தேசிய காங்கிரஸ் தனது பங்காளி கூட்டான சிரேஷ்ட எம்.பிக்களை உடைய 10 கட்சிகளை உதறித்தள்ளிவிட்டு ரணிலுக்கு ஆதரவை தெரிவித்தது. அவர்களது தேர்தல் மேடைகளாக இருக்கட்டும், ஊடக மாநாடுகளாக இருக்கட்டும் அல்லது வேறு ஏதாவது அரசியல் நடவடிக்கைகளாக இருக்கட்டும் எதுவாக இருந்தாலும் ரணில் எனும் பெயரை உச்சரிக்காமல் அல்லது விமர்சிக்காமல் அவர்கள் அந்த நடவடிக்கைகளை முடித்ததாக இல்லை. அப்படியானவர்கள் ஒரு அறிக்கையொன்றை வெளியிட்டனர் அந்த அறிக்கையில் நம் நாடு ,என்றும் இல்லாதவாறு எதிர் கொண்டுள்ள பொருளாதார, சமூக, அரசியல் நெருக்கடி நிலைகளில் இருந்து நாட்டை மீட்பதற்கு பாராளுமன்றத்திற்குள்ளும் , வெளியிலும் அரசியல் தலைவர்கள் ,கட்சிகள் ,குழுக்கள் என பல கூட்டங்கள் ,சந்திப்புக்கள் நடைபெற்றிருக்கின்றன. அவ்வேளைகளில் பல கட்சிகளின் கருத்துக்களை செவிமடுத்ததோடு ,எமது நிலைப்பாடுகளை எல்லா சந்தர்ப்பங்களிலும் நிலை நிறுத்தி இருக்கின்றோம். என்று தெரிவித்திருந்தனர்.

மேலும் தேசிய காங்கிரஸ் தன்னுடைய அறிக்கையில், இந் நிலையில் அரசியல் ஆர்ப்பாட்டநெருக்கு வாரங்களினால் ஜனாதிபதியின் பதவி விலகலும் பிரதம அமைச்சர் றணில் விக்ரமசிங்க பதில் ஜனாதிபதி நியமனமும் ,அடுத்து மேற்கொள்ளப்பட வேண்டிய மிகப்பாரிய பணிகளுக்கு வித்திட்டிருக்கின்றது எனலாம். இறுக்கமாக இக்கால கட்டத்தையும் பொருளாதார நெருக்கடியையும் நாடு எதிர் கொண்டிருக்கும் இத் தருணத்தில் நாட்டின் எஞ்சிய ஆட்சி காலத்தை தலைமை ஏற்று நடாத்த பாராளுமன்ற உறுப்பினர்களில் ஒருவரையே ஜனாதிபதியாக தெரிவு செய்வதற்கு யாப்பு இடமளித்துள்ளது. அந்த வகையில் மூன்று வேட்பாளர்கள் பாராளுமன்றத்தில் களம் இறங்கி இருந்தனர். இந்த நிலையில் கடந்த காலங்களில் நாட்டை ஆட்சி செய்த ஜனாதிபதிகள் பிரதம அமைச்சர்களில் இன்று வாழ்கின்றவர்கள் எல்லோரும் ஒன்றாகயிருந்து சரிந்து போன பொருளாதாரத்தையும் , நாட்டின் கௌரவத்தையும் கட்டி எழுப்புவதற்கு ஒன்று சேர வேண்டும் என்பது தேசிய காங்கிரஸின் நிலைப்பாடாகும் என்று அறிவித்திருந்தனர்.

மட்டுமின்றி அந்த அறிக்கையில் நாட்டு மக்கள் எல்லோரும் வாழ்வதற்கான ஒரு முறையான யாப்பு உருவாக்கப்பட வேண்டும் என்ற எண்ணங்களோடு தேசிய காங்கிரஸ் கடமையாற்றுகின்றது. இந் நிலையில் ஜனாதிபதி பதவி பாராளுமன்றத்திற்கு இடையே அதிகார மாற்றங்கள் தொடர்பாக பல சந்தர்ப்பங்களில் றணில் விக்ரமசிங்க இதற்காக உழைத்திருக்கின்றார். மேற் சொன்ன விடயங்களை கருத்தில் கொண்டும் ,பல முறை பிரதமராக இருந்த அனுபவம் இன்றைய ஜனாதிபதி வெற்றிடத்தை பூரணப்படுத்தும் என்ற நம்பிக்கை உள்ளது. மேலும் பாராளுமன்றத்திற்கு அதிகாரங்கள் கூட்டப்பட வேண்டும் என்று பலரும் கருதுகின்ற இச் சந்தர்பத்தில் பலமுள்ள ஒரு பிரதம அமைச்சரை தேடுவதே நமது பணி என்பதால் ,ரணில் விக்ரமசிங்கவை ஜனாதிபதியாக தெரிவு செய்வதற்கு தனது ஆதரவை தெரிவிப்பதாக தேசிய காங்கிரஸ் அரசியல் உயர் பீடம் தீர்மானித்துள்ளது என்று தனது அரசியல் வாழ்வில் ஒரு மாற்று கொள்கையை அல்லது தீர்மானத்தை அதாஉல்லா அறிவித்திருக்கிறார். அந்த தீர்மானம் சரியா பிழையா என்பதை தாண்டி கொள்கை அரசியல் செய்த அதாவுல்லாவின் இந்த தீர்மானம் பிழைக்கமாட்டாது என்பது உலக மற்றும் பூகோள அரசியல் அறிந்தோருக்கு விளங்கியிருக்கும்.

அவரது இந்த அறிவிப்பு பலருக்கும் ஆச்சரியத்தை தந்தாலும் அதில் பல எதார்த்தங்கள் புதைந்திருந்ததை ஆழமாக அலசுவோர் அறிந்துகொள்வர். "ரணில் என்பவர் ஐ.தே. கட்சி எனும் வாகனத்தின் சாரதியாக இருக்கும் வரை நானோ என்னுடைய சமூகமோ ஏறாது என்ற மு.கா ஸ்தாபக தலைவர் மறைந்த அஸ்ரப்" கூறிய கூற்றை தனது வாதமாக கொண்டிருந்த அதாஉல்லா அதனை காரணம் காட்டியே பல தடவைகள் ஏனைய முஸ்லிம் கட்சித்தலைவர்கள் ஹக்கீம், றிசாத் போன்றோரை பொதுவெளியில் கடுந்தொனியில் விளாசித்தள்ளி வந்தார். ஆனால் இன்று அவரும் அந்த நேர்கோட்டிலையே நிற்கிறார். இந்த சம்பவங்களுக்கு வியாக்கியானம் பேசும் தேசிய காங்கிரஸ் ஆதரவாளர்கள் ரணிலின் பஸ்ஸில் நாங்கள் ஏறவில்லை எங்களின் பஸ்ஸின் சாரதியாக ரணிலை நியமித்துள்ளோம் என்கின்றனர். இதில் உண்மைகள் இல்லாமலும் இல்லை.

**ரணில் ஜனாதிபதியானதும் தலைதூக்கிய "ஹிட்லரிஸம்"**

மிகநீண்டகாலமாக அரசியலில் இருந்தும் அந்தக்கதிரை மட்டும் தனக்கு எட்டாக்கனியாக இருந்துவந்ததை உணர்ந்து பல்வேறு அரசியல் காய் நகர்த்தல்களின் விளைவாக எம்.பிக்களின் தயவில் ஜனாதிபதி கதிரையை அடைந்த ரணில் ஜனாதிபதியாகி சில மணித்தியாலயங்களிலையே காலிமுகத்திடல் பகுதியில் இராணுவத்தினரின் கொடூர தாக்குதல் இடம்பெற்றது. சூரியன் உதிக்க முன்னர் இடம்பெற்ற இந்த தாக்குதலில் இலக்காகி காயமடைந்துள்ள இளைஞர்களை வைத்தியசாலைக்கு கொண்டு செல்ல அனுமதி மறுக்கப்பட்டதாக போராட்டக்காரர்கள் அன்றே தெரிவித்துள்ளனர். குறித்த பகுதியிலிருந்து போராட்டக்காரர்கள் வெளியேறாத வண்ணம் கோட்டா கோ கம பகுதியை சுற்றியுள்ள அனைத்து பாதைகளும் மூடப்பட்டமை ஏன் எனும் கேள்விக்கு பதில் எல்லோரிடமும் இருக்கிறது.

ஐந்து தசாப்த கால அரசியல் வாழ்வைக் கொண்டிருக்கின்ற இராஜதந்திரி ரணில் விக்ரமசிங்க அரசியல் வட்டாரத்தில் "நரியாக" நோக்கப்படுபவர். தனது வாழ்நாளில் அவர் ஜனாதிபதிக் கனவை ஒவ்வொரு நாளும் சுமந்து கொண்டிருந்தார். இரண்டு தடவைகள் ஜனாதிபதித் தேர்தலில் நேரடியாக யானையில் போட்டியிட்டு தோல்வியடைந்த போதிலும், அவர் தனது கனவை அடைவதற்கான அனைத்துச் சந்தர்ப்பங்களையும் பரீட்சித்துப் பார்ப்பதற்கு தயாராக இருந்தார். அதுதான், அவரை காலம் செய்த கோலமாகவும் புவியியல் அரசியலின் தாக்கத்தினாலும் அரக்கலவின் அனுசரணையுடனும் இன்று ஜனாதிபதியாக்கியிருக்கிறது. வீட்டை தீக்கிரையாக்கி நாட்டை கைப்பற்றிய அரசியல்வாதியாக நம்பிக்கைக் கதைகளில் புதிய நாயகனாகவும் ரணில் மாறியிருக்கிறார்.

இந்நிலையில் அன்றிரவு கோட்டா கோ கம பகுதிக்கு பொலிஸ் உயரதிகாரிகளின் பாதுகாப்புடன் துப்பரவுப் பணியாளர்கள் அழைத்து வரப்பட்டு எஞ்சியிருந்த கூடாரங்கள் மற்றும் போராட்டக்கள தடயங்களை அகற்றும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. ஜனாதிபதி செயலகத்திற்கு முன்பாக அமைக்கப்பட்டிருந்த கோட்டா கோ கம போராட்டக்களம் முற்றுமுழுதாக இராணுவத்தினரின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டமை போராட்டக் களத்திலிருந்த சட்டத்தரணி ஒருவர் உட்பட 10 போராட்டக்கள செயற்பாட்டாளர்கள் கைது செய்யப்பட்டமை போன்றன "ஹிட்லரிஸம்" என்கின்றனர் போராட்டக்களத்தினர். தாமாக வெளியேற தயாராக இருந்த காலிமுகத்திடலில் போராட்டத்தில் ஈடுபட்ட கோட்டா கோ கம போராட்டக்காரர்களை அங்கிருந்து அகற்றும் நடவடிக்கைகளில் இராணுவத்தினர் கடுமையாக ஈடுபட்டமை காரணமாக போராட்டக்காரர்களுக்கும், இராணுவத்தினருக்கும் இடையில் கடும் மோதல் நிலவியுள்ளதுடன், போராட்டக்காரர்கள் மீது இராணுவத்தினர் கடுமையான தாக்குதல்களை மேற்கொண்டுள்ளமை பலத்த கண்டனத்தை சந்தித்திருந்தது.

**கண்டனங்கள் நிறைந்த காலை**

காலிமுகத்திடல் போராட்டக்காரர்கள் மீது முன்னெடுக்கப்பட்ட தாக்குதலை கண்டித்து விடுதலைப்புலிகளுடன் போர் செய்த இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா அம்மையார் "காலிமுகத்திடல் தாக்குதல் மிகவும் வன்மையாக கண்டிக்கத்தக்கது என கண்டனம் வெளியிட்டார். தனது அறிக்கையில் அவர் வெளியிட்ட விடயங்களான போராட்டக்காரர்களை அங்கிருந்து அகற்ற வேண்டும் என்றால் பொலிஸாரை கொண்டு அதனை செய்திருக்க வேண்டும். அதைவிடுத்து முப்படையினரையும் களமிறக்கி ஆயுதபலத்தை கொண்டு தாக்குதல்களை நடத்தி போராட்டக்காரர்களை அப்புறப்படுத்தியமை வன்மையாக கண்டிக்கத்தக்கது. மக்களின் உரிமைகள் தொடர்பில் ஜனநாயக வழியில் போராடும் மக்களின் உரிமைகளை எந்த அரசு ஆட்சியில் இருந்தாலும் மதிக்க வேண்டும். மக்களின் ஜனநாயக எழுச்சிப் போராட்டம் தான் அராஜக ராஜபக்ச ஆட்சிக்கு முடிவு கட்டியது. இதனை புதிய ஜனாதிபதி ரணில் உணர்ந்து செயற்படுவார் என்று நம்புகின்றேன்" என தெரிவித்திருந்தார். அதுதான் ஜனநாயகத்தை விரும்பிய எல்லோரது கருத்தாகவும் இருந்தது.

போராட்டத்தின் போது இராணுவத்தினருடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்ட போராட்டக்காரர்களின் பிரதிநிதிகள் மீது இராணுவத்தினர் கொடூரமான முறையில் தாக்குதல் மேற்கொண்டு அவர்களை இராணுவத்தினர் அழைத்து சென்றதாக போராட்டக்காரர்கள் தரப்பில் கூறப்பட்டது. இதேவேளை, காலிமுகத்திடல் பகுதிக்கு செல்ல எந்தவொரு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ஊடகவியலாளர்களுக்கும் அனுமதி மறுத்துள்ளதுடன், செல்ல முற்படும் சந்தர்ப்பத்தில் கைது செய்யப்பட நேரிடும் என்றும் எச்சரிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

மேற்குலக நாடுகளின் நண்பனாக கொள்ளப்படுவதுடன் தன்னை ஜனநாயக வாதியாக காட்டிக்கொண்ட ரணில் இந்த சம்பவத்தின் மூலம் இலங்கையர்களினது மட்டுமின்றி சர்வதேச சமூகத்தினதும் கண்டனங்களை சந்தித்தார். அறவழியில் போராடிக் கொண்டிருந்தவர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் கோழைத்தனமானது. அவர்கள் குறித்த இடத்திலிருந்து தங்கள் போராட்டத்தை மீளப்பெறத் தீர்மானித்திருந்த நிலையில் அவர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. மிலேச்சத்தனம் மற்றும் ஆணவம் ஆகியன மூலமாக உந்தப்பட்ட இந்தத் தாக்குதல் காரணமாக அப்பாவிகளின் உயிர்கள் ஆபத்தை எதிர்கொண்டிருந்தது. அத்துடன் மிக இக்கட்டான தருணமொன்றில் இலங்கையின் நற்பெயரை சர்வதேச ரீதியாக கெடுக்கும் வகையிலும் இந்தச் செயற்பாடு நடைபெற்றுள்ளது என்று ரணிலின் கட்சி பிரதித்தலைவராக இருந்து இன்று எதிர்க்கட்சி தலைவராக இருக்கும் ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதானி சஜித் பிரேமதாச கண்டனம் தெரிவித்திருந்தார். அது போன்று ஸ்ரீலங்கா ஜனநாயக கட்சீ ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்களுக்கு போராட்டக்காரர்களை பேச்சுவார்த்தைக்கு அழைக்க ஒரு சந்தர்ப்பம் இருந்தது. போராட்டக்காரர்களின் கருத்துக்களைக் கேட்டறிந்து அடுத்த 6 மாதங்களுக்கான அரசாங்கத்தின் திட்டங்கள் குறித்து போராட்டக்காரர்களுக்கு ஜனாதிபதி விளக்கியிருக்கலாம். அதற்கான வாய்ப்பு நிறையவே இருந்தது. அதன் மூலமாக போராட்டக்காரர்கள் எமது நாட்டின் தற்போதைய நிலைமையை புரிந்து கொள்ள வாய்ப்பிருந்தது. போராட்டக்காரர்களின் உண்மையான போராட்டம் வெற்றியடைந்து மக்கள் சக்தியைக் காட்டுவதில் போராட்டக்காரர்கள் வெற்றி பெற்றுள்ளார்கள் என்று அறிக்கையொன்றினூடாக சுட்டிக்காட்டியிருந்தனர்.

போராட்டக்காரர்கள் மீது தாக்குதல் இடம்பெற்ற அன்று காலை முதல் சர்வதேச நாடுகளின் பிரமுகர்கள், தூதுவர்கள், உயர்ஸ்தானிகர்கள், சர்வதேச பொது அமைப்புக்கள், உள்நாட்டு பொது அமைப்புக்கள், பல்வேறு கட்சிகள், முக்கிய பிரமுகர்கள், பலமிக்க தொழிற்சங்கங்கள் எனப்பலரும் தமது கண்டனங்களை ரணில் அரசுக்கு எதிராக வெளியிட்டுத்தள்ளினர்.

பாராளுமன்றத்தில் நடைபெற்ற ஜனாதிபதி தேர்வுக்கான வாக்களிப்பில், ரணில் பெற்ற 134 வாக்குகள் சொல்லும் செய்தி, ராஜபக்ஷக்களின் ஆதரவும் ஆசிர்வாதமும் ரணிலுக்கு இருப்பதுடன் நாங்கள் எல்லோரும் ஒரே அணியில் இருக்கிறோம் என்பதே. தலைபோகும் நேரத்தில் தலைமுடியை பலிகொடுக்க எண்ணி இப்போது ரணிலை முன்னிறுத்தியிருக்கிறார்கள் ராஜபக்ஸக்கள். ராஜபக்ச ரெஜிமண்ட்க்கு எதிராக இடம்பெற்ற பொது மக்களின் போராட்டம் மலினப்படுத்தப்பட்டு கொடுங்கோலனாக ரணிலை காட்டி ராஜபக்ஷக்கள் மீதான கோபத்தை தணிக்க செய்ய எடுத்த திட்டத்தில் வென்றுள்ளார்கள். ஆனால் இந்த போராட்டத்திலும் மு.கா தலைவரின் கணக்கு பிழைத்து தனது எம்.பிக்களிடம் மண்கவ்வியுள்ளார். அதனால் பழைய கோபங்களை மறந்து புதிய சிநேகிதத்துடன் அமைச்சர் பதவியொன்றை பெற எத்தனிக்கும் முஸ்லிம் தலைவர்கள் காலியான அரச கஜானாவிலிருந்து மக்களுக்கு செய்யப்போகும் சேவை என்ன என்பதை காலமே உணர்த்த வேண்டும்.

# கைது வேட்டை தொடர்ந்தால் பெரும் போராட்டம் வெடிக்கும்

## – அரசுக்குச் சுமந்திரன் எச்சரிக்கை



"மக்களின் தன்னெழுச்சிப் போராட்டங்களால் ஆட்சிப்பீடமேறிய புதிய அரசு, அந்தப் போராட்டங்களுக்குத் தலைமை தாங்கியவர்களை வேட்டையாடும் செயற்பாடுகளை ஒருபோதும் அனுமதிக்க முடியாது. இந்த அடக்குமுறையை அரசு உடன் நிறுத்த வேண்டும். இல்லையேல் அதற்கு எதிராக மக்களுடன் இணைந்து மாபெரும் போராட்டங்களில் ஈடுபடுவோம்."

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் "சர்வகட்சி ஒன்றிணைவு" என்ற தொனிப்பொருளில் எதிர்க்கட்சிகளின் தலைவர்கள் இணைந்து இன்று நடத்திய கூட்டு ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"புதிய அரசு மக்கள் மீது தொடர்ச்சியாக அடக்குமுறையைப் பிரயோகித்துக் கொண்டிருக்கின்றது. மக்கள் எழுச்சிப் போராட்டங்களால் நாட்டில் பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. அந்த மாற்றங்களினாலேயே இந்த அரசு ஆட்சியைக் கைப்பற்றியது. போராட்டக்காரர்களின் முதுகில் ஏறி ஆட்சியைக் கைப்பற்றியவர்கள், தற்போது அந்தப் போராட்டக்காரர்களையே வேட்டையாடத் தொடங்கியுள்ளமையை ஏற்றுக்கொள்ள முடியாது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தில் ஆற்றிய கொள்கை விளக்க உரையில், ஆரம்பத்தில் முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டங்கள் வன்முறையற்றவையாகவும், அமைதியானவையாகவும் காணப்பட்டன என்று சான்றிதழ் வழங்கியிருந்தார். ஆனால், இந்த ஆர்ப்பாட்டங்களுக்கு ஆரம்பத்திலிருந்தே தலைமை தாங்கியவர்களைத் தற்போது அரசு கைதுசெய்து வருகின்றது.

நேற்றுக் கைதுசெய்யப்பட்ட இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின் பிரபல தொழிற்சங்கவாதியாவார். அவரைக் கைதுசெய்ததை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். இவ்வாறான கைதுகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். ஏற்கனவே கைதுசெய்யப்பட்டவர்கள் விடுதலை செய்யப்பட வேண்டும். போராடும் உரிமையை எவரும் தடுக்க முடியாது" - என்றார்.

## மழையினால் நெல் அறுவடை பாதிப்பு

(இஸட்.ஏ.றகுமான்)

அம்பாறை மாவட்டத்தின் பல பிரதேசங்களில் சிறுபோக வேளாண்மை அறுவடை செய்யப்பட்டு வருகிறது. இந் நிலையில் சில பிரதேசங்களில் மழை காரணமாக அறுவடை பாதிப்படைந்துள்ளது.

விளைச்சல் குறைவினாலும் அதிக செலவினாலும் விவசாயிகள் பாதிப்படைந்துள்ள நிலையில், மழை காரணமாகவும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இதனால் விவசாயிகள் மிகவும் கவலையடைந்துள்ளனர். இதே வேளை, நெல்லின் விலையும் வீழ்ச்சியடைந்துள்ளது. மரத்தால் விழுந்தவனை மாடு மிதித்தது போன்ற நிலையில் விவசாயிகள் உள்ளனர்.

## 7 மாதங்களில் 6 இலட்சம் கடவுச் சீட்டுக்கள் விநியோகம்

(ஐ.ஏ. காதிர்கான்)

நாட்டில் கடந்த 7 மாதங்களில் சுமார் 6 இலட்சம் கடவுச் சீட்டுக்கள் விநியோகிக்கப்பட்டுள்ளதாக, குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் பிரதிக் கட்டுப்பாட்டாளர் பியுமி பண்டார, இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் முதல் ஏழு மாதங்களில் சுமார் 6 இலட்சம் கடவுச் சீட்டுக்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

கடந்த ஆண்டு இதே காலப்பகுதியில், 147,192 கடவுச் சீட்டுக்களே விநியோகிக்கப்பட்டிருந்தன.

இதேவேளைஇ கடந்த ஜூலை மாதத்தில் மாத்திரம் ஒரு நாள் மற்றும் சாதாரண சேவைகளில் கடவுச் சீட்டுக்களைப் பெற்றுக் கொள்வதற்காக, 101,777 விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன. இவற்றில் 98,124 பேருக்கு மாத்திரமே, கடவுச் சீட்டுக்களை வழங்க முடிந்துள்ளது.

மத்திய வங்கியின் அண்மைய அறிக்கையின்படி, இந்த ஆண்டின் முதல் அறையாண்டில், 140,701 பேர் வெளிநாட்டு வேலை வாய்ப்புக்காகச் சென்றுள்ளனர்.

எனினும்இ 2021 ஆம் ஆண்டில் 117,952 பேர் மட்டுமே வெளிநாட்டு வேலை வாய்ப்புக்காகச் சென்றுள்ளனர் என்றும் அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

## அட்டாளைச்சேனையில் வாழ்வாதார உதவிகள் வழங்கும் நிகழ்வு



(சியாத்.எம்.இஸ்மாயில்)

அட்டாளைச்சேனைப் பிரதேசத்தில் தற்போதைய பொருளாதார நெருக்கடியினை கருத்திற்கொண்டு வாழ்வாதார மேம்படுத்தல் திட்டத்தின் கீழ் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு அரிய இன கருங் கோழிக்குஞ்சுகளை வழங்கி வைக்கும் நிகழ்வு அட்டாளைச்சேனை பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் அண்மையில் நடைபெற்றது.

அக்கரைப்பற்று தக்வா ஜும்ஆப்பள்ளிவாசல் அனுசரணையுடன், அட்டாளைச்சேனை பிரதேச செயலக சமுர்த்தி திட்ட ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்நிகழ்வில், அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் எம்.ஏ.சி. அஹமட் சாபீர் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு பயனாளிகளுக்கு வழங்கி வைத்தார்.

இந்நிகழ்வில் உதவி பிரதேச செயலாளர் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

## நியூசிலாந்து தூதுவருடன் ஜே.வி.பி. சந்திப்பு!



இலங்கைக்கான நியூசிலாந்து தூதுவருக்கும் மக்கள் விடுதலை முன்னணியினருக்குமிடையிலான சந்திப்பொன்று இன்று பிற்பகல் ஜே.வி.பி. தலைமைச் செயலகத்தில் இடம்பெற்றது.

நாட்டின் தற்போதைய அரசியல், பொருளாதார நிலைமைகள் குறித்தும் ஜேவிபி இன் கொள்கைகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டதுடன்,

இரு தரப்புப் பரஸ்பரப் புரிந்துணர்வை கட்டியெழுப்புவது தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டது.

மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அனுர திஸாநாயக்க, கட்சியின் கொள்கை பரப்புச் செயலாளர் விஜித ஹேரத், இலங்கைக்கான நியூசிலாந்து தூதுவர் மிக்கேல் ஏபில்டன், பிரதித் தூதுவர் ஏன்ட்ரூ ட்ரவலர், நியூசிலாந்து உயர்ஸ்தானிகராலயக் கொள்கை ஆலோசகர் சுமுது ஜயசிங்க ஆகியோர் இந்தக் கலந்துரையாடலில் ஈடுபட்டிருந்தார்கள்.

## சிராஜ் மசூரினால் நாசருக்கு நூல் வழங்கி வைப்பு !



(ஏ.எம். றிகாஸ்)

நினைவுச் சாரலில் எட்வேர்ட் செய்த் எனும் நூல் தென்னிந்திய திரைப்பட நடிகர் நாசரிற்கு வழங்கி வைக்கப்பட்டது.

நேற்று சேனையூரில் இடம்பெற்ற அனாமிகா பண்பாட்டு மையத் திறப்பு விழா நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட தென்னிந்திய திரைப்பட நடிகர் நாசரிற்கு சிராஜ் மசூரினால் , அவர் எழுதிய நினைவுச் சாரலில் எட்வேர்ட் செய்த் எனும் நூலை வழங்கி வைத்தார்

படத்தில் பண்பாட்டு மையத்தின் நிறுவனரும் கிழக்குப் பல்கலைக்கழக முன்னாள் கலை, கலாசார பீடாதிபதியுமான கலாநிதி பாலசுகுமார் இணைந்திருப்பதையும் காணலாம்.

## ஆட்டோக்களுக்கு எந்தவொரு எரிபொருள் நிரப்பு நிலையத்திலும் எரிபொருள் பெறலாம்

(எம்.ஐ.அப்துல் நஸார்)

முச்சக்கர வண்டிகளைப் பதிவு செய்துள்ள பொலிஸ் பிரிவிலுள்ள குறித்த எரிபொருள் நிரப்பு நிலையங்களிலிருந்து மாத்திரம் எரிபொருள் வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டிருந்தபோதிலும் கியூஆர் முறைமை மூலம் எந்தவொரு எரிபொருள் நிரப்பு நிலையங்களிலிருந்தும் எரிபொருளைப் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்பு முச்சக்கரவண்டி சாரதிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இருப்பினும் உரிய பொலிஸ் பிரிவில் முச்சக்கர வண்டிகளைப் பதிவு செய்ய வேண்டுமென முச்சக்கரவண்டி சாரதிகளுக்கு அறிவுறுத்தப்பட்டதால், அவர்கள் மிகுந்த அசௌகரியங்களை எதிர்நோக்கினர். அதற்கான ஆவணங்களைத் தயார் செய்வதற்கும் பணத்தினைச் செலவு செய்ய வேண்டியுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர் என சிங்களப் பத்திரிகை ஒன்றில் செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

எந்தவொரு எரிபொருள் நிரப்பு நிலையங்களிலிருந்தும் எரிபொருளைப் பெற்றுக்கொள்ள சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளமை தொடர்பில் முச்சக்கரவண்டி சாரதிகள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர்.



கலாநிதி சொலமன் அலெக்சாண்டரை நிறுவனராக கொண்ட கிளாரட் கிறிஸ்தவ சர்வதேச பாடசாலை கடந்த சனியன்று (06) கொழும்பு-15 சென்.ஜேம்ஸ் வீதியில் ஆரம்பிக்கப்பட்டது. இதில் பாடசாலை நிர்வாகத்தினர் மற்றும் அதிதிகள் பலரும் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

## கல்முனை ஸாஹிரா கல்லூரியின் ஆசிரியர் சட்டத்தரணியாக சத்திய பிரமாணம்



கல்முனை ஸாஹிரா கல்லூரியின் ஆங்கில பாட ஆசிரியரும், தரம் 11 பகுதி தலைவருமான ஷஃபி எச். இஸ்மாயில் பிரதம நீதியரசர் உட்பட்ட உயர் நீதிமன்ற நீதியரசர் குழாமின் முன் சட்டத்தரணியாக கடந்த வெள்ளியன்று (5) சத்திய பிரமாணம் செய்து கொண்டார்.

இலங்கை திறந்த பல்கலைக்கழக சட்டமானியான இவர் அப்பல்கலைக்கழகத்திலேயே குற்றவியல் நீதி நிர்வாக துறையில் (Criminal Justice Administration) சட்ட முதுமானி பட்டத்தையும் தொடர்வது குறிப்பிடத்தக்கது.

இவர் இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பை பூர்த்தி செய்தவர்.

இவர் சாய்ந்தமருதைச் சேர்ந்த ஐ. ஹதியதுல்லாஹ் இஸ்மாயில், எம்.எச்.வஹிதா நூன் தம்பதிகளின் மூன்றாவது மகனும் ஆசிரியை பாத்திமா நஸீஹாவின் கணவருமாவார்.

நீதிக்கான மையத்தின் தலைவராகவும் செயற்படுகிறார்.



- அப்ரா அன்சார்

# பலஸ்தீன் தாக்குதல் தேர்தல் வியூகமா?

இஸ்ரேல் பாலஸ்தீனத்துக்கும் இடையே காசா பகுதியில் கடுமையான தாக்குதல் நடைபெற்று வருகின்றது. இதற்கு என்ன காரணம்?, பின்னணி வரலாறு ? ஏன் இன்னும் முடிவுக்கு வரவில்லை? சர்வதேசம் ஏன் பாலஸ்தீனத்தை கண்டு கொள்வதில்லை? என்ற பல கேள்விகள் இருக்கின்றது. வரலாற்றை திரும்பிப் பார்க்காதவர்கள் இந்த தொடர் போரை அறிந்து கொள்ள முடியாது. எனவே இங்கு பின்னணி வரலாறு தான் முக்கியம். உலக அரங்கில் போராட்டங்களுக்கு பஞ்சமில்லை. எங்கு பார்த்தாலும் இருள் சூழ்ந்த யுத்த மேகங்களாக இருக்கின்றன. எனினும் பாலஸ்தீனில் நடைபெறுகின்ற போராட்டங்கள் வித்தியாசமானது, வேறுபட்டது எனலாம். ஆக்கிரமிக்கப்பட்ட மற்றும் அடிமைப்படுத்தப்பட்ட சமூகம் அதற்கு எதிராக போர் புரிவது சமூகத்தின் கடமையாகும். உரிமையை வென்றெடுக்க வேண்டியது தேசத்தில் பிறந்த மக்களின் தலையாய கடமையாகும்.

பாலஸ்தீனம் நீண்ட வரலாறுகளைக் கொண்ட பழமை வாய்ந்த பல வரலாறுகளை சுமந்த பூமியாகும். நம்மை பொறுத்தவரை ஒரு மாதம் என்பது ஊதியத்திற்கான கால மதிப்பீடு அல்லது வருடத்தில் கடந்து செல்லும் இன்னுமொரு மாதம் ஆனால் பாலஸ்தீன மக்களுக்கு அது அவ்வாறு அல்ல பிறப்பு, இறப்பு ,பட்டினி, போராட்டம், வீடிழப்பு, அகதிகளாய் வெளியேறுதல், ஆதரவற்ற குழந்தைகள், உடல் உறுப்புகளை இழந்தோர், வேலையற்றோர் எனும் தமது அன்றாட வாழ்வில் அத்தனை அழிவு, அட்டூழியங்களையும் சந்தித்து வருகின்ற மண்ணாகும்.

இஸ்ரேல் பாலஸ்தீனத்துக்கும் இடையே பல ஆண்டுகளாக மோதல் தொடர்கின்றது. இதற்கு இஸ்ரேல் தரப்பு முழு வேட்டையில் களமிறங்கியுள்ளது. இதற்கிடையில் இஸ்ரேலுக்கும் பலஸ்தீனத்திற்குமிடையில் கடந்த சில நாட்களாக மீண்டும் மோதல் அதிகரித்துள்ளது. இந் நிலையில் இஸ்ரேலின் கட்டுப்பாட்டில் உள்ள மேற்கு கரையின் நப்லுஸ் நகரில் உள்ள யூத மத வழிபாட்டு தளத்திற்கு கடந்த 5ஆம் திகதி இஸ்ரேலிய பாதுகாப்பு படையினர் சென்றனர். இதனை எதிர்த்து அப் பகுதியில் உள்ள பாலஸ்தீனியர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். போராட்டம் உடனடியாக வன்முறையாக மாறியது. இஸ்ரேலிய பாதுகாப்பு படையினர் மற்றும் வழிபாடு நடத்தியவர்கள் மீது தாக்குதல் தொடரப்பட்டது. இதனை தொடர்ந்து இஸ்ரேலிய பாதுகாப்பு படையினருக்கும், பலஸ்தீன்களுக்கும் இடையே மோதல் வெடித்தது. மோதலில் ஈடுபட்டவர்களை கலைக்க இஸ்ரேலிய பாதுகாப்பு படையினர் கண்ணீர் புகை குண்டுகள் வீசியும், துப்பாக்கிச் சூடும் நடத்தியுள்ளனர். இந்த மோதலில் பாலஸ்தீனத்தை சேர்ந்த 16 வயதான ஹைத் ரஃபிக்யூ என்ற சிறுவன் இஸ்ரேலிய படையின் துப்பாக்கிச்சூட்டில் துப்பாக்கிக் குண்டு பாய்ந்து உயிரிழந்தார்.

இந்த நிலையில் இஸ்ரேலின் ஏவுகணை தாக்குதலில் பாலஸ்தீனத்தின் காசா பகுதியில் அடுக்குமாடி குடியிருப்பு தகர்க்கப்பட்டுள்ளது. இதில் ஐந்து வயது சிறுமி உட்பட 10 பேர் முதலாம் நாள் பரிதாபகரமாக உயிரிழந்தனர். மேலும் 12 பேர் படுகாயம் அடைந்துள்ளதாக பாலஸ்தீன ஊடகங்கள் தெரிவித்துள்ளன. இந் நிலையில் உயிரிழந்த ஐந்து வயது சிறுமியின் பாட்டன் தனது பேத்தியின் மரணம் குறித்து கண்ணீர் தழும்ப கேள்வி எழுப்பியுள்ளார். மிடில் ஈஸ்ட் ஐ செய்தி நிறுவனம் வெளியிட்ட காணொளியில் இவை தெரிவிக்கப்பட்டுள்ளது.

"அவள் பாலர் பாடசாலைக்கு செல்ல வேண்டும் என்று கனவு கண்டால் , அவளுக்கு ஒரு பை மற்றும் ஒரு துணி வேண்டும். இந்த அப்பாவி சிறுமி என்ன செய்தாள்? அவள் என்ன ரொக்கட்டுக்களின் பொறுப்பாளராக இருந்தாளா? அல்லது சண்டையிட்டாளா? என கண்ணீருடன் கேட்டுள்ளார்.

காச மீதான இஸ்ரேலிய தாக்குதலில் இதுவரையில் இறந்தவர்களின் எண்ணிக்கை 6 குழந்தைகள் உட்பட 31 ஆக உயர்வடைந்துள்ளது.260 ற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். இந் நிலையில் இஸ்ரேலின் தாக்குதலால் ஹமாஸ் அமைப்பின் இரண்டாவது தளபதி கொல்லப்பட்டுள்ளதாக அல்ஜெஸீரா செய்தி வெளியிட்டுள்ளது. இஸ்ரேலில் தாக்குதல்களை நடத்த திட்டமிட்டு இருந்ததாலேயே பாலஸ்தீன அமைப்பை குறி வைத்ததாக இஸ்ரேலின் இடைக்கால பிரதமர் யாயிட் லாபிர் தெரிவித்துள்ளார். ஹமாஸ் அமைப்பை சேர்ந்த டைசி அல் ஜபாரி என்பவரின் இருப்பிடத்தை குறி வைத்தே இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இஸ்ரேலில் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் இடைக்கால பிரதமராக இருக்கும் லாபிட் தன்னுடைய பலத்தை நிரூபிக்க இந்த தாக்குதலை நிகழ்த்தி இருக்கலாமென தெரிவிக்கப்படுகின்றது. இஸ்ரேலின் இந்த தாக்குதலுக்கு பலஸ்தீன் எந்த நேரத்திலும் பதிலடி கொடுக்கலாம் என்பதால் இஸ்ரேலில் கடும் பதற்றம் நிலவுகின்றது. வான்வெளி தாக்குதல்களை தடுக்க இஸ்ரேல் விமான படையினர் தயார் நிலையில் இருப்பதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

யார் இந்த ஹமாஸ் ?

இஸ்ரேல் ஹமாஸை அஞ்சுகிறதா?

பாலஸ்தீனப் பகுதிகளில் இயங்கி வரும் பல்வேறு ஆயுதக் குழுக்களில் மிகப் பெரியது ஹமாஸ் அமைப்பாகும்.

இப் பெயர் இஸ்லாமிய கிளர்ச்சி இயக்கம் என்பதன் அரேபியச் சுருக்கத்தில் இருந்து பெறப்பட்டது. மேற்குக் கரையையும் காசா நிலப் பகுதியையும் ஆக்கிரமிக்கும் இஸ்ரேலிய முயற்சிக்கு எதிரான முதல் பாலஸ்தீன எழுச்சி தொடங்கிய பிறகு 1987 ஆம் ஆண்டில் உருவானதே ஹமாஸ். இஸ்ரேலை அடியோடு அழிப்பதே தங்களது நோக்கம் என இதன் சாசனம் கூறுகிறது.

ஹமாஸ் இரு வேறு பணிகளைச் செய்து வருகின்றது. ஒன்று இஸ் அட்-டின் அல்-காசம் என்ற தனது ராணுவப் பிரிவின் மூலம் இஸ்ரேலுக்கு எதிரான தாக்குதல்களை நடத்துவது. அடுத்தது, நலத்திட்டங்கள் மூலம் சமூகப் பணிகளைச் செய்வது.ஆனால் 2005ஆம் ஆண்டில் காசா பகுதியிலிருந்து இஸ்ரேலியப் படைகள் விலக்கிக் கொள்ளப்பட்ட பிறகு ஹமாஸ் இயக்கம் அரசியல் நடவடிக்கைகளில் இறங்கியது. 2006ஆம் ஆண்டு நடந்த பாலஸ்தீன தேர்தலில் ஹமாஸ் இயக்கம் வெற்றி பெற்றது. கூட்டணி அரசிலும் பங்கேற்றது. முகமது அப்பாஸின் ஃபதா இயக்கத்தைப் பகைத்துக் கொண்டதால் அரசிலிருந்து வெளியேற்றப்பட்டு காசாவுக்குள் முடங்கியது.அதன் பிறகு இஸ்ரேலுடன் மூன்று பெரிய போர்களில் காசா ஈடுபட்டிருக்கிறது. இஸ்ரேலுக்கும் எகிப்துக்கும் இடையே அடைபட்டிருக்கும் காசா பகுதிக்குள் ஹமாஸ் இயக்கத்தை தனிமைப்படுத்துவதற்காகவும் தாக்குதல்களைத் நிறுத்தவதற்காகவும் இஸ்ரேல் பல்வேறு தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

ஹமாஸ் இயக்கத்தை முழுமையாகவும், சில நேரங்களில் அதன் ராணுவப் பிரிவை மட்டும் பயங்கரவாத இயக்கமாக இஸ்ரேலும், அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம், பிரிட்டன் ஆகிய நாடுகள் பட்டியலிடுகின்றன.பாலஸ்தீனர்களின் பிரதிநிதியாகக் கருதப்பட்ட பாலஸ்தீன விடுதலை இயக்கத்துக்கும் இஸ்ரேலுக்கும் இடையேயான அமைதி உடன்பாட்டை எதிர்த்த முக்கியமான இயக்கம் என்ற வகையில் 1990களில் பரவலாக அறியப்பட்டது ஹமாஸ் அமைப்பாகும்.

இஸ்ரேலும் பாலஸ்தீன நிர்வாகமும் எத்தனையோ நடவடிக்களை ஹமாஸ/க்கு எதிராக எடுத்தன. அதைக் கட்டுப்படுத்த முயற்சித்தன. ஆனால் தற்கொலைத் தாக்குதல்கள் மூலமாக இஸ்ரேலுக்கும் - பாலஸ்தீன விடுதலை இயக்கத்துக்கும் இடையேயான அமைதி உடன்பாட்டை தகர்த்தது ஹமாஸ்.

1995 ஆம் ஆண்டு டிசம்பரில் ஹமாஸின் வெடிகுண்டு தயாரிப்பாளரான யாயா ஆயாஷை இஸ்ரேல் கொன்றது. இதற்குப் பழிவாங்கும் வகையில் 1996ஆம் ஆண்டு பெப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களில் பல்வேறு தற்கொலைத் தாக்குதல்களை ஹமாஸ் இயக்கம் நடத்தியது. சுமார் 60க்கும் மேற்பட்ட இஸ்ரேலியர்கள் கொல்லப்பட்டார்கள்.

ஒஸ்லோ உடன்பாட்டுக்குப் பிறகு, குறிப்பாக அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்டனின் கேம்ப் டேவிட் பேச்சுகள் தோல்வியடைந்த பிறகும், இரண்டாவது பாலஸ்தீன எழுச்சியைச் தொடர்ந்தும் ஹமாஸ் இயக்கம் வலுவடைந்தது.

ஃபதா அமைப்பின் கட்டுப்பாட்டில் இருந்த பாலஸ்தீன நிர்வாகத்தில் ஊழலும் நிர்வாகச் சீர்கேடும் நிறைந்திருப்பதாக அதிருப்தி எழுந்த நிலையில், ஹமாஸ் இயக்கம் மருத்துமனைகளும் பள்ளிகளையும் உருவாக்கியது.இரண்டாவது பாலஸ்தீன எழுச்சியின் தொடக்க ஆண்டுகளில் ஹமாஸ் இயக்கத்தின் தற்கொலைத் தாக்குதல்களை பாலஸ்தீனர்கள் பரவலாக ஆதரித்தனர். அவற்றை தியாக நடவடிக்கைகள் என்று அவர்கள் கருதினார்கள். மேற்குக் கரையில் இஸ்ரேலிய ஆக்கிரமிப்புக்குப் பழிவாங்கப்படுவதாக எண்ணினார்கள்.

2004 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் ஹமாஸ் மதத் தலைவர் ஷேக் அஹ்மத் யாசின் மற்றும் அவருக்கு அடுத்த நிலையில் இருந்த அப்துல் அஜீஸ் அல்-ரேண்டிஸ்ஸி ஆகியோரை ஏவுகணைகள் மூலம் கொன்றது இஸ்ரேல்.அதே ஆண்டில் ஃபதா இயக்கத்தின் தலைவர் யாசிர் அராஃபத் மரணமடைந்தார். பாலஸ்தீன நிர்வாகத்துக்கு முகம்மது அப்பாஸ் தலைவராக நியமிக்கப்பட்டார். ஹமாஸின் ராக்கெட் தாக்குதல்கள் மோசமான விளைவுகளை ஏற்படுத்துவதாகக் கருதக்கூடியவராகவே அவர் இருந்தார்.

2006 ஆம் ஆண்டு நடந்த பாலஸ்தீன நாடாளுமன்றத் தேர்தலில் ஹமாஸ் இயக்கம் பெரும்பான்மையுடன் வெற்றி பெற்றது. ஃபதா இயக்கத்துக்கும் ஹமாஸ் இயக்கத்துக்கும் அதிகார மோதல் தொடங்கியது.

தேர்தலில் வெற்றிபெற்றிருந்த ஹமாஸ் இயக்கம், அதற்கு முன் பாலஸ்தீன நிர்வாகத்தால் கையெழுத்திடப்பட்டிருந்த அனைத்து உடன்பாடுகளையும் எதிர்த்தது. இஸ்ரேல் என்ற நாட்டை அங்கீகரிப்பது உள்ளிட்டவையும் அவற்றில் அடங்கும்.இஸ்ரேல் நாட்டை உள்ளடக்கிய வரலாற்று ரீதியிலான நிலப்பரப்பே பாலஸ்தீனம் என ஹமாஸின் சாசனம் வரையறுக்கிறது. யூத நாட்டுடன் எந்தவிதமான அமைதி உடன்பாடும் கூடாது என உறுதியாக உள்ளது.

யூத மக்களுக்கு எதிரான கடுமையான கருத்துகள் அந்த சாசனத்தில் கூறப்பட்டுள்ளன. அதனால் யூத எதிர்ப்புக் கொள்கையைக் கொண்ட அமைப்பு என ஹமாஸ் மீது விமர்சனம் வைக்கப்படுகிறது.

2017 ஆம் ஆண்டு ஹமாஸ் இயக்கம் தனது புதிய கொள்கைகளைக் கொண்ட ஆவணத்தை வெளியிட்டது. 1988 ஆம் ஆண்டு சாசனத்தின் பல்வேறு அம்சங்களில் தீவிரத்தன்மை இதில் குறைந்திருந்தது. நிலைப்பாடுகள் மாறியிருந்தன.ஆயினும் இஸ்ரேல் என்றொரு நாட்டை அங்கீரிப்பதாயில்லை. ஆனால் காசா, மேற்குக்கரை, கிழக்கு ஜெருசலேம் ஆகிய பகுதிகளை உள்ளடக்கிய பாலஸ்தீன நாட்டை உருவாக்குவதை ஒப்புக் கொண்டது.ஹமாஸின் சண்டை, யூதர்களுக்கு எதிரானதல்ல, "ஸியோனிச ஆக்கிரிப்பாளர்களுக்கு" எதிரானது என்கிறது. ஹமாஸின் புதிய ஆவணம். ஆனால் இஸ்ரேல் இதை ஏற்கவில்லை. உலகை ஏமாற்றும் முயற்சி என்று விமர்சித்தது.

ஹமாஸூக்கு எதிராக இஸ்ரேலும் அதற்கு ஆதரவான மேற்கு நாடுகளும் பல்வேறு அரசியல் மற்றும் பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளன.2007-ஆம் ஆண்டு காசா துண்டு நிலப் பகுதியில் இருந்து ஃபதா இயக்கத்துக்கு ஆதரவான படைகளை ஹமாஸ் இயக்கம் வெளியேற்றியது. பதிலடியாக காஸாவின் எல்லைகளில் தடைகளைக் கடுமையாக்கியது இஸ்ரேல். ஹமாஸ் இயக்கம் இஸ்ரேலை நோக்கி ராக்கெட்டுகளை ஏவியது. இஸ்ரேல் வான்வழித் தாக்குதல்களை நடத்தியது.

காசா பகுதியில் இருந்து நடத்தப்படும் அனைத்து ராக்கெட் தாக்குதல்களுக்கும் ஹமாஸ் இயக்கமே காரணம் என்கிறது இஸ்ரேல். இது வரை காசா பகுதிக்குள் மூன்று முறை ராணுவ நடவடிக்கைகளும் மேற்கொண்டிருக்கிறது.

2008 ஆம் ஆண்டு டிசம்பரில் காசா பகுதியிலிருந்து ராக்கெட் தாக்குதல்களைத் தடுப்பதற்காக ஒபரேஷன் கேஸ்ட் லீட் என்ற பெயரில் ராணுவ நடவடிக்கையை இஸ்ரேல் நடத்தியது. 22 நாள்கள் நடந்த இந்தப் போரில் 1,300 பாலத்தீனர்களும் 13 இஸ்ரேலியர்களும் கொல்லப்பட்டார்கள்.இதே போன்றதொரு காரணத்துக்காக 2012ஆம் ஆண்டில் ஒபரேஷன் பில்லர் டிஃபன்ஸ் என்ற பெயரில் காசா மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தியது. அப்போது நடந்த வான்வெளி தாக்குதலில் காசம் படைப் பிரிவின் தலைவர் அகமது ஜபாரி கொல்லப்பட்டார். 8 நாள்கள் நீடித்த சண்டையில் 170 பாலத்தீனர்களும் 6 இஸ்ரேலியர்களும் பலியானார்கள்.

இந்த இரு சண்டைகளில் இருந்து மீண்டு வந்தது ஹமாஸ். ராணுவ ரீதியாக பின்னடைவு ஏற்பட்டாலும் இஸ்ரேலை எதிர்த்த இயக்கம் என்ற வகையில் பாலஸ்தீனர்களின் பரவலான ஆதரவு ஹமாஸ/க்குக் கிடைத்தது.2014-ஆம் ஆண்டு மேற்குக் கரையில் இருந்த ஹமாஸ் இயக்க உறுப்பினர்களை இஸ்ரேல் அதிரடிச் சோதனைகளை நடத்திக் கைது செய்தது.

அந்த ஆண்டின் ஜூலை மாதத்தில் இஸ்ரேலை நோக்கி ராக்கெட்டுகளை ஏவியது ஹமாஸ். அதற்கு மறுநாளே ஒபரேஷன் புரோடெக்டிவ் எட்ஜ் என்ற பெயரில் தாக்குதல்களைத் தொடங்கியது. காசாவிலிருந்து இஸ்ரேலுக்குள் நுழையும் சுரங்கப் பாதைகளையும் அழித்தது.இந்தச் சண்டை 50 நாள்கள் நீடித்தது. 2,251 பாலத்தீனர்கள் உயிரிழந்தார்கள். இவர்களில் 1,462 பேர் பொதுமக்கள். இஸ்ரேலியத் தரப்பில் 67 வீரர்களும் பொதுமக்களில் 6 பேரும் கொல்லப்பட்டனர்.

2014ஆம் ஆண்டிலிருந்து அவ்வப்போது சண்டைகள் தொடங்குவதும் எகிப்து, கட்டார், ஐ.நா. போன்றவற்றின் தலையீட்டில் நிறுத்தப்படுவதுமாக பலமுறை நடந்திருக்கிறது. முழு அளவிலான போர் எதுவும் வெடிக்கவில்லை.

காசா பகுதியைச் சுற்றி கடுமையான தடைகளை இஸ்ரேல் விதித்திருந்தாலும், ஹமாஸ் இயக்கம் காசாவை தன்னுடைய கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறது. ராக்கெட்டின் வலிமையையும் அதிகரித்திருக்கிறது. ஃபதா இயக்கத்துடனான அமைதி முயற்சிகளும் தோல்வியடைந்துவிட்டன.

அதே நேரத்தில் காசா பகுதியில் வசிக்கும் சுமார் 20 லட்சம் பாலஸ்தீன மக்களின் நிலைமை மோசமடைந்திருக்கிறது. பொருளாதாரம் சீர்குலைந்துவிட்டது. குடிநீர், மின்சாரம், மருந்துகளுக்குத் தட்டுப்பாடு நிலவுகிறது.இப்போது நடத்தியிருக்கும் இஸ்ரேலின் தாக்குதலுக்கு பலஸ்தீன் பதிலடி கொடுக்கலாம் என்பது இஸ்ரேலின் அச்சமாக உள்ளது.எனினும் பலம்மிக்க ஹமாஸ/டன் இஸ்ரேல் மோதாமல் இருப்பதில்லை.

இதற்கு தீர்வே இல்லை என்ற கேள்விகளுக்கு மிக விரைவில் விடை கிடைக்காது என்பதே உண்மை.

***



